# மாதநிலா

உங்கள் குடும்ப நிலா

MATHANILA මාතනිලා

50/-

நிலா - 19 Regd No: 1419 01 மே 2014


## தென்கொரியா கப்பல் விபத்தில் கப்பல் கேப்டன் சதி!



## கமலுக்கு இது தேவைதானா?




## அடகு வைத்த நகைகள் மாயம்: வங்கிக்கு பொதுமக்கள் சீல் வைப்பு!





## சடலமாக கிடைத்த ஜெரோமி கொன்சலிற்றாவின் கையடக்க தொலைபேசியை ஆய்வுக்கு அனுப்ப நீதிபதி சிவகுமார் உத்தரவு!



இம்மாத குட்டீஸ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அறிவு! ஆனந்தம்!! ஆச்சரியம்!!!







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதநிலா

MATHANILA மாதநிலா உங்கள் குடும்ப நிலா!

இதழாசிரியர்
**திருமதி. அனிதா விஜய்**

நிர்வாக இயக்குனர்
**திரு. எஸ். விஜய்**

கணினி வடிவமைப்பு,
அச்சுப் பதிப்பு
**விஜய் அச்சுப் பதிப்பகம்**
**172, மில் வீதி, வவுனியா.**
**024 222 5799 / 077 900 9491**

வெளியீடு
**பதிப்புநிலம் வெளியீட்டகம்**
**172, மில் வீதி, வவுனியா.**
**024 222 5799 / 077 900 9491**

**அனைத்து ஆக்கங்களையும் கருத்துக்களையும் அனுப்ப வேண்டிய முகவரி**

ஆசிரியர்,
**"மாதநிலா"**
172B, மில் வீதி, வவுனியா.


**எமது சஞ்சிகையில் வெளிவந்திருக்கும் ஆக்கங்களுக்கு அவரவரே பொறுப்பாளிகளாவர்**

**விளம்பரங்களில் உள்ள விடயங்களுக்கு விளம்பரதாரர்களே உரித்தாவார்கள்**

## இம்மாத வேண்டுகோள்!




## புகைபிடிப்பதை நிறுத்துவோம்

1. ஒவ்வொரு முறை புகை பிடிக்கும்போதும், உங்கள் வாழ்நாளில் இருந்து 1 மணி நேரத்தை இழந்து கொண்டிருக்கிறீர்கள் (உதாரணமாக, ஒரு நாளைக்கு 5. சிகரெட் வீதம் ஒரு வாரத்திற்கு பிடிக்கும் புகை, உங்கள் மொத்த வாழ்நாளில் இருந்து 1 நாளை குறைத்து விடுகிறது).

2. ஒவ்வொரு புகை இழுப்பும் 4,000 வெவ்வேறு தீய பொருட்களைக் கொண்டது. இதில் புற்றுநோய் மற்றும் இருதய நோய் ஏற்படுத்தும் ரசாயன பொருட்களும் அடங்கும்.

3. சிகரெட்டின் எரிமுனையில் வெப்பநிலை 900 டிகிரி செல்சியஸ் ஆகும். இது நீரின் கொதிநிலையை விட 9 மடங்கு அதிகமானது. இந்த வெப்பநிலையில் சில ரசாயன மாற்றங்கள் ஏற்பட்டு மிகவும் விஷமுள்ள பொருட்களை விடுவிக்கப்படுகின்றன. இதனால் இயற்கை மாசுபடுவதோடு, உங்கள் அருகில் உள்ள அப்பாவிகளும் நீங்கள் விடும் புகையால் பாதிக்கப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருவமே...

Best year of one's life' எதுவென்றால் அது பள்ளிப்பருவம் தான்.

ஏனென்றால் பிள்ளைகளின் வாழ்க்கையை, எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் பருவம் இது. இந்தப் பருவத்தை முறையாகப் பயன்படுத்துபவர்கள் நல்லதொரு எதிர்காலத்தை நோக்கிப் பயணம் செய்ய முடியும்.

தடுமாறுபவர்கள் தங்கள் வாழ்க்கையைத் தொலைக்க நேரிடும். எதிர்காலம் என்பது ஒரு பெரிய கேள்விக்குறியாக இருக்கும். பொறுப்பற்ற



தான்தோன்றித்தனமான வாழ்க்கையை வாழ நேரிடும்.

பள்ளிப் பருவ காலத்தில் பிள்ளைகளின் வாழ்க்கையைத் தீர்மானிப்பது பள்ளியும், படிப்பும் மட்டுமே அல்ல. அதையும் தாண்டி பள்ளி தவிர்த்த வெளி இடங்களில் அவர்கள் நடந்துகொள்ளும் முறை, ஒழுக்கம், நேர்மை, தன்னம்பிக்கை மற்றும் எதிலும் கவனம் சிதறாமை போன்றனவும் மிக முக்கியம்.

நல்ல ஒரு வாழ்க்கையை அமைத்துக்கொள்ள ஒவ்வொரு மாணவனும் தன்னை அறிதல் வேண்டும். தன்னை அறிதல் என்பது ஒவ்வொரு மாணவரும் தங்கள் குடும்பச் சூழ்நிலை, மாணவராக தன்னுடைய கடமை இவற்றைத் தெளிவாக அறிந்துகொண்டு இருப்பது.

மேலும் மாணவர்கள் தங்களுக்குள்ளே இருக்கும் திறமைகளை முதலில் இனங்கண்டு கொள்ள வேண்டும். அடுத்து, அந்த ஆற்றலை வளர்த்துக்கொள்ள என்ன செய்ய வேண்டும் என்று சிந்தித்து களம் இறங்க வேண்டும்.

ஒவ்வொரு பிள்ளையிடமும் ஒவ்வொரு தனித்திறமை கண்டிப்பாக உள்ளது. திறமையும் ஆற்றலும் ஒருவருக்கொருவர் வேறுபடும். அவ்வளவுதான். திறமையும் ஆற்றலும் உடலை மட்டும் பொறுத்தது அன்று. அது ஒவ்வொரு மாணவரின் உள்ளத்தையும் அறிவையும் பொறுத்தது. எந்த ஒரு மாணவர் தன்னிடம் உள்ள ஆற்றலை அடையாளம் கண்டு அதன்மூலம் தன் திறமையை வெளிக்கொண்டு வருகிறாரோ அவரே வெற்றி காண்பார்.

செய்கின்ற தொழில் எதுவாயினும் அதில் தன் திறன் வெளிப்படுமாறு தன்னை உயர்த்திக்கொள்ளல் என்பதே உயர்வுக்கான வழியாகும். இது பள்ளி மாணவர்களுக்கு மிகவும் பொருந்தும்.

பொதுவாகவே பள்ளியைத் தவிர்த்து வெளி இடங்களில் நடக்கும் செயல்களினால் கவரப்பட்டு தடுமாறாமல் இருக்க மாணவர்கள் தங்களைத் தயார் செய்து கொள்ள வேண்டும்.

சில பிள்ளைகள் தன் வயதுக்கு மீறிய சிலருடன் நட்புக் கொண்டாடுவார்கள். இதை 'Morbid Relationship' என்று சொல்லலாம். இத்தகைய நட்பினால் சிறுவயதிலேயே சில தேவையற்ற கெட்ட பழக்கவழக்கத்திற்கு பிள்ளைகள் அடிமையாகின்றார்கள்.

பெண் குழந்தைகள் இந்த விசயத்தில் மேலும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். வெளி இடங்களில் அறிமுகமில்லாத நபர்கள் உங்களிடம் பேச முற்படுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களின் உள் உணர்வு (Intution) பேச்சை வளர்க்காதே என்றுதான் சொல்லும். ஆனால் சிலசமயம் நாகரிகம் காரணமாக நம் உள்உணர்வைப் புறக்கணித்து பேச்சை வளர்த்தால் அது ஆபத்தில் கொண்டுவிடும்.

அடுத்ததாக இணையதளங்களில் வரும் ஆபாச வலைத்தளங்களை நண்பர்களுடன் பார்ப்பது. இது முற்றிலும் தவறான பழக்கம். தன் அறிவை இழந்து சுயசிந்தனையைத் தானே மழுங்கடித்துக் கொள்வது. மேலும் சிறு வயதிலேயே தேவையற்ற பாலியல் சிந்தனைகளை வளர்த்துக்கொண்டு படிப்பிலிருந்து கவனம் சிதறி வாழ்க்கையைத் தொலைக்க நேரிடும்.

பெற்றோர்கள்தான் தங்கள் பிள்ளைகளின் நட்பு வட்டாரத்தைப் பற்றியும், பிள்ளைகள் அதிகமான நேரத்தை எங்கு, யாரிடம் செலவிடுகின்றார்கள் என்பதைப் பற்றியும் நன்கு தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

அடுத்தது செல்பேசி. இதன்மீது மாணவர்களுக்கு இருக்கும் ஆர்வம். தன் தாய்தந்தை வருமானத்தையும் மீறி குடும்பச் சூழ்நிலையை மறந்து எவ்வளவு விலைகொடுத்தும் 'Cell Phone' வாங்க பெற்றோரை வற்புறுத்தும் பிள்ளைகள் ஏராளம்.

ஆண், பெண் நண்பர்களுடன் காரணமில்லாமல் உரையாடலை வளர்த்துக்கொண்டு பின் தேவையில்லாத பல பிரச்சினைகளை எதிர் கொள்கிறார்கள். பெற்றோர் அவசியம் தங்கள் பிள்ளைகளின் எதிர்த்தரப்பிலிருந்து பேசுவது யார் என்பதையும் தெரிந்து வைத்திருக்க வேண்டும். பெரும்பாலான மாணவர்கள் இன்று போதை மருந்துகளுக்கு அடிமையாகி உள்ளனர்.

சங்கிலித் தொடர்போல ஒரு பிள்ளையிடம் இருந்து இன்னொருவருக்கு என வெகு சுலபமாகப் பரவி வருகிறது. போதைக்கு அடிமையான மாணவர்கள் பெற்றோரிடமும், குடும்ப உறுப்பினர்களிடமும் இருந்து விலகி, தன்னை மறக்கும் சூழ்நிலைக்கு வந்துவிடுவார்கள். அதனால் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டு வாழ்க்கையைத் தொலைக்கின்றார்கள்.

மாணவர்கள் அனைவரும் ஒன்றே ஒன்றை மட்டும் கவனித்துக் கொள்ளுங்கள். நீங்கள் செய்யும் தவறு, பின் தவறை மறைக்க மேற்கொள்ளும் முயற்சிகள் உங்கள் மனதில் மிருகத்தனத்தை மெல்ல மெல்லக் குடியேறச் செய்து விடுகின்றது. அதனால் உங்களிடம் உள்ள மனிதத்தன்மை வெளியேறி விடும். இறுதிவரை தவற்றைத் திருத்திக் கொள்ளாவிடில் முழுக்க முழுக்க மிருகத்தனத்திற்கு நீங்கள் ஆளாக நேரிடும்.

மாணவர்கள் தன் பெற்றோருடன் நல்ல ஒரு புரிதலை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். பள்ளி மற்றும் வெளியில் ஏற்படும் அனுபவங்களைப் பெற்றோருடன் பகிர்ந்து கொள்ளுங்கள். அவர்களின் துணையோடு உங்கள் வாழ்க்கையை வளமானதாக்கிக் கொள்ளுங்கள்

**"மாதநிலா" சஞ்சிகையில்**
**க.பொ.த.சாதாரண தர பரீட்சையில்**
**6 பாடச் சித்தியுடன்**

**வேலைவாய்ப்பு**

**யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, ஆகிய மாவட்டங்களிலிருந்தும் விற்பனைப் பிரதிநிதிகள் எதிர்பார்க்கப்படுகின்றனர்**

**ஆன், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்**

**தொடர்புகளுக்கு:**
**077 0498177**

## உங்களுக்குத் தெரியுமா?

**கேள்வி** : நீர் அருந்தாமல் பல்லி எவ்வாறு உயிர் வாழ்கிறது

**பதில்** : பல்லி நீர்த் தேவையை இரண்டு விதங்களில் பெறுகிறது. 1. பூச்சிகளை உணவுப் பொருளாக விழுங்கும்போது பூச்சிகளில் உள்ள நீரைப் பெறுகிறது. 2. செல்களின் வளர்சிதை மாற்ற நிகழ்ச்சி நடைபெறும்போது உருவாகும் நீரைத் தக்கவைத்துப் பயன்படுத்திக் கொள்கிறது. பல்லியின் கழிவு நீக்க உறுப்பான சிறுநீரகம் அதிக அளவு நீரை இழப்பதில்லை. அதன் சிறுநீர் அமிலத் தன்மை மிக்கதாக இருக்கிறது. பல்லியின் சிறுநீர் நம் உடலில் காயமாவது அதனால்தான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாய்ந்த கோபுரம்

இத்தாலியில் பைசா (Pisa) என்ற அழகான நகரம் உள்ளது. இங்கு எட்டடுக்கு மாடிகளுடன் காணப்படும் கோபுரமே பைசா நகர கோபுரம் என்றழைக்கப்படுகிறது. கி.பி. 1174 – 1350 இல் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

இக்கோபுரம் சாய்ந்து கொண்டே வருவதால், பைசா நகர சாய்ந்த கோபுரம் என்றே பெரும்பாலும் அழைக்கப்படுகிறது. இதுவரை 16 1/2 அடிவரை சாய்ந்துள்ளது. இக்கோபுரம் கட்டப்பட்ட பின்பு சாயத் தொடங்கியதா என்றால், இல்லை என்றே சொல்ல வேண்டும். கோபுரத்தின் மூன்றாவது மாடியினைக் கட்டும்போதே சாயத் தொடங்கிவிட்டதாம்.

சாய்வதற்கான காரண ங்களைப் பலரும் பலவிதமாகக் கூறுகின்றனர். என்றாலும், 10 அடி அஸ்திவாரத்தில் மட்டுமே அமைந்துள்ளதும், 14,500 மெட்ரிக் டன் எடையைத் தாங்கக் கூடிய அளவிற்கு அந்த இடத்தின் மண் வலுவானதாக இல்லை, அடித்தளம் மணலினைக் கொட்டி எழுப்பியதால்தான் சாய்ந்து வந்தது என்பதும் நம்பக்கூடியவையாக உள்ளன. மேலும், மத்தியத் தரைக்கடலிலிருந்து வீசும் உப்புக் காற்றும் கேட்டினை அதிகப்படுத்தி வந்தது. மூன்றாவது மாடியினைக் கட்டத் தொடங்கும் போதே, கட்டட நிபுணர்கள் தங்கள் தவறினைச் சரிசெய்ய முயற்சி செய்தனர். ஆனால் முடியவில்லை. எனினும், அதற்குமேல் ஐந்து மாடிகளைக் கட்டிவிட்டனர். 175 ஆண்டுகளில் கொஞ்சம் கொஞ்சமாகத் திட்டமிட்டுக் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.



பைசா நகர சாய்ந்த கோபுரம் அதன் அருகில் உள்ள மாதா கோயில் ஒன்றுக்கு மணிக்கூண்டாகக் கட்டப்பட்டது.

கோபுரத்தின் உயரம் 179 அடியாகவும், சுவர்கள் 13 அடி கனத்திலும் உள்ளன. உச்சியில் 6-7 அடிவரை கனத்திலும் கட்டப்பட்டுள்ளது. முதல் மாடியில் 15 தூண்களால் தாங்கப்படும் கமான்களும், அடுத்த 6 மாடிகளில் 30 தூண்களும், மேல்மாடியில் 12 தூண்களும் உள்ளன. மேல்மாடியில் மணிகள் உள்ளன.

மேல்மாடிகளுக்குச் செல்ல உள்ளே 296 படிக்கட்டுகள் உள்ளன. கோபுரத்தின் உச்சியிலிருந்து ஒரு கல்லினைப் போட்டோமென்றால், அக்கல் கோபுரத்தின் அடியிலிருந்து 16 1/2 அடி தள்ளி விழுகின்ற முறையில் கோபுர அமைப்பானது அமைக்கப்பட்டுள்ளது. வெள்ளைச் சல்வைக் கல்லினால் காண்போர் கண்களைக் கவரும் வகையில் கட்டப்பட்டுள்ளது.

கோபுரத்தின் உச்சியில் நகரைப் பார்த்து ரசிப்பதற்கு மேடையும் உள்ளது. இம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேடையிலிருந்துதான் 1589 இல் விஞ்ஞானி கலிலியோ, மேலிருந்து கீழ்நோக்கி விழும் பொருள்களின் முடுக்கத்தைப் (Acceleration) பற்றிய ஆய்வினை மேற்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. இம்மேடையிலிருந்து பைசா நகரின் அழகிய காட்சியினையும், மத்தியத் தரைக் கடலையும் கண்டு ரசித்து மகிழ்லாம்.

கோபுரத்தைப் பார்க்க ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். கோபுரத்தின் சாய்வினைத் தடுக்க, கட்டடக் கலை பொறியியல் வல்லுநர்கள் பல ஆண்டுகளாக முயற்சி மேற்கொண்டு வந்தனர்.

அந்தக் கால மக்களே இவ்வளவு திறமையுடன் கட்டியுள்ளார்கள். தொழில்நுட்பம் வளர்ந்த கணினியுகத்தில் உள்ளவர்கள் சாய்வினைத் தடுக்க தொடர்ந்து முயற்சி செய்தனர். முயற்சி வெற்றியைத் தந்துள்ளது.

யுனெஸ்கோ அமைப்பும் 1989 இல் கோபுரத்தைப் பாதுகாக்கும் பணியினை ஏற்றுக்கொண்டது. பழுது பார்க்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வந்தது. கோபுரத்திற்கடியில் சேர்ந்துள்ள மண் மற்றும் கழிவுப் பொருள்களை லேசர், உளி மற்றும் சிறிய வகை ஊசிகளைப் பயன்படுத்தி நீக்கினர். 6 மில்லியன் பவுண்டு செலவில் கிட்டதட்ட 5.5 டிகிரி சாய்ந்திருந்த கோபுரம் மீட்கப்பட்டு, தற்போது 3.9. டிகிரி சாய்வு நிலைக்கு நேர் செய்யப்பட்டுள்ளது.

இன்னும் 200 ஆண்டுகளுக்கு இந்தக் கோபுரத்துக்கு ஆபத்து இல்லை என்று இதனைப் பராமரித்து வரும் ஒபரா பிரமாசியால் நிறுவனம் தெரிவித்துள்ளது.

8ம் பக்கத்திற்கான விடை

## கதை கேளு கணக்குப் போடு - விடை



ம ; மனிதன்
சி ; சிம்பொன்சி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ம | ம | ம | ம | சி | சி |
| சி | சி | சி | ம | ம | சி |
| ம | ம | ம | சி | ம | சி |
| சி | ம | ம | சி | சி | சி |
| ம | சி | சி | ம | ம | சி |



"மாதநிலா" சஞ்சிகையின் அற்புத படைப்புகளில் ஒன்றான

# "அன்புக்கரம்"

வறுமையின் காரணமாக பாடசாலைக் கல்வியை ஆரம்பிக்கமுடியாமலும், இடையில் விடப்பட்ட கல்வியைத் தொடரமுடியாமலும் உள்ள மாணவர்களுக்காக ஆரம்பிக்கப்பட்டதே இந்த "அன்புக்கரம்".

(குறிப்பாக 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களும், க.பொ.த. சாதாரணப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களும், க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களும்)

நீங்கள் வறுமையின் காரணமாக கல்வியைத் தொடரமுடியவில்லையா? அப்படியாயின் கவலையை விடுங்கள் எங்கள் அன்புக்கரம் உங்களுக்குக் கைகொடுக்கும்.

உங்கள் பிரதேச கிராமசேவையாளரின் உறுதிப்படுத்தலுடன் எங்களுடைய வழமையான முகவரிக்கு நேரில் வாருங்கள்.

**வறுமையின் காரணமாக கல்விகற்க முடியாமல் இருக்கும் அனைத்து மாணவர்களுக்காகவும் உருவாக்கப்பட்டதே இந்த அன்புக்கரம்**

*"உங்கள் மூன்றாவது கரம் அன்புக்கரம்"*

**எதிர்பாருங்கள்**

**எமது சஞ்சிகை ஒவ்வொரு மாதத்தின் முதல் ஐந்து நாட்களுக்குள் வெளிவரும்**

என்பதை வாசகர்களுக்கு அறியத்தருகின்றோம்


## ஓகன் பயிற்சி வகுப்புக்கள்

நன்கு தேர்ச்சி பெற்ற ஆசிரியரினால் பிரத்தியேக வகுப்புக்கள் நடைபெறுகின்றன



தொடர்புகளுக்கு...

**077 900 94 91**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேஸ்புக்கில் சுட்டதில் பட்டது





Shabee San

முடியல்ல... இந்தக் கணக்கு வாத்தியரை புரிஞ்சுக்கவே முடியல்ல.. நேற்று 5 ம் 5ம் 10 எண்டு சொல்லுறார். இன்று 7 ம் 3 ம் 10 எண்டு சொல்லுறார்.... எதை நான் நம்புறது....

நினைவே
நீயான பின்பு
நினைப்பதற்கே
நேரமேது...



உலகிலே மிக விலைமதிப்பில்லாத திரவப்பொருள் கண்ணீர்..

அதில் 1% தண்ணீரும்..
99% உணர்சிகளும் அடங்கி இருக்கிறது..

எனவே, அதை வீணாக்க செய்யாதே!!!

Shabee San

...எழுதிய கவிதை .....!!!
"உள்ளே ஒரு ஜோடி
சேர்ந்துவிட்டது" Shabee

பொண்ணும் ஃபிளைட்டும் ஒன்னுதான் போல...




காணாமப் போனா...
நாலுபேர் நாலு விதமாத்தான் பேசுறாங்க...!!!






நமக்குள் சாதி பாகுபாடும்,
தீண்டாமையும் இருப்பதற்கு
நாம் காரணமில்லை என்ற போதும்,
அவற்றை அடியோடு ஒழிப்பதற்கு
நாமே காரணமாக இருந்திடல் வேண்டும்
-டாக்டர் அம்பேத்கர்



ஒரு சராசரி மனிதனின்
இருதயம் ஒரு நாளுக்கு 100,000
தடவை, ஒரு வருடத்திற்கு
35,000,000 தடவை மற்றும்
வாழ்நாள் முழுவதும்
2,500,000,000 தடவை
துடிக்கின்றது.



# சிந்தனைச் சிதறல் 11

## இம்மாதச் சிதறல்

புகைபிடித்தல்



வாசகர்களே!
மாதம் ஒவ்வொன்றிலும்
சிந்தனைச் சிதறலாக வரும் உருவப்படத்திற்கு
உங்கள் ஒவ்வொருவரின் சிந்தனைகளும்
பலதிசைகளில் சிதறுகின்றன. அவைகளை
உணர்வுமிக்க பத்துவரிகளுக்குள் எமது
வழமையான முகவரிக்கு எழுதி
அனுப்புங்கள்

## மார்ச் மாதச் சிதறல்



### 1 பணப்பரிசு பெறும் கவிதை

ஆள்பாதி ஆடை பாதியாய்
அந்தரங்களை அம்பலமாக்கிட
முதியோரும் மோகமேறி கண்கள் மேந்திட
சொந்த சேய் உறவே பிறழ்ந்து இச்சை பீறிட
நீவிழர்தான் காரணமோ?

ச.அ.இராசநாயகம்
வவுனியா.

### 2

அரைகுறை ஆடையால் மட்டும்
அழகுவந்திடாதடி - உன்
சோதரனிடம் கேட்டுப்பார்
அவன் சொல்வான்
எது மறா அழகென்று

வர்ணன்
2ம் வாய்க்கால்,
கிளிநொச்சி.

### 3

அழகென்று சொல்லி
அரைகுறை ஆடையால் வீதியில்
விபத்தை அல்லவா வீசுகிறாய்
விபத்தை தவிர்ப்பதற்காக
ஆடையின் நீளத்தை கூட்டிக்கொள்!

கணேஸ்
திருநாவற்குளம்.
வவுனியா.

### பாராட்டு பெறும் கவிதைகள்

அழகென்று நீயணியும் ஆடை
உன் மதிப்பை எடைபோட்டுவிடும்
அதையறியாமல் புன்முறுவலுடன்
புரியாமல் இருக்கிறாய்
தோழி

க.ஜானுஜா
மறவன்குளம், வவுனியா

சிந்தனைச் சிதறலுக்கான
பணப்பரிசு தொகை விபரம்

**1ம் இடத்தைப் பெறும் கவிதைக்குரிய பணப்பரிசு 500/-**
**2ம் இடத்தைப் பெறும் கவிதைக்குரிய பணப்பரிசு 300/-**
**3ம் இடத்தைப் பெறும் கவிதைக்குரிய பணப்பரிசு 200/-**

சிந்தனைச் சிதறலுக்கு
பிரதான அனுசரணை:
சர்வதேச மொழித்திறன் விருத்தி நிறுவனம்
ILSDI


| | | | |
|---|---|---|---|
| French | Deutsch | Italian | Dutch |
| Korean | Danish | English | Sinhala |
| Tamil | IELTS | TOEFL | Ket(A1,A2) |

168 1/3, 3rd Floor building, 2nd Cross Street, Vavuniya (near Nelly Star Hotel)
024-5610154 / 077 3493285



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதை கேளு கணக்குப்போடு



படகு ஒன்றில் 15 மனிதர்களும் 15 சிம்பொன்சி குரங்குகளும் பயணம் செய்து கொண்டிருந்தனர். திடீரென வீசிய புயல் காற்றில் படகு சேதம் அடைந்தது. படகினைச் செலுத்திக் கொண்டிருந்த தலைவன், படகில் பயணம் செய்தவர்களைப் பார்த்து, உங்களில் பாதிப்பேர் கடலில் குதித்தால்தான் படகினைப் பாதுகாப்பான முறையில் கரைக்குக் கொண்டு செல்ல முடியும். இல்லையென்றால், படகு தண்ணீரில் மூழ்கிவிடும் என்றார்.


சிம்பொன்சிகளைக் கடலில் குதிக்கச் சொன்னபோது அவை மறுத்துவிட்டன. எந்த முடிவுக்கும் வரமுடியாத சூழ்நிலையில் இருந்தனர் மனிதர்கள். அதில் ஒருவர் மட்டும் யோசித்து, நாம் அனைவரும் வட்டமாக நிற்போம். யார் 9 என்ற எண்ணைச் சொல்லும்படி வருகிறார்களோ அவர் கடலில் குதிக்கட்டும். இப்படியே 15 பேர் குதிக்கட்டும் என்றார். மனிதர்கள் அனைவரும் ஏற்றுக் கொண்டனர். சிம்பொன்சிகளும் தலையசைத்து ஏற்றுக் கொண்டன.

மனிதர்களையும் சிம்பொன்சிகளையும் வட்ட வடிவில் நிறுத்தினார் அந்தப் புத்திசாலி மனிதர். அப்போது, 9 என்ற எண் தொடர்ச்சியாக சிம்பொன்சிகளிடமே வந்தது. மனிதர்கள் காப்பாற்றப்பட்டனர்.

மனிதர்களும் சிம்பொன்சிகளும் எந்த வரிசையில் வட்ட வடிவமாக நிறுத்தி வைக்கப்பட்டனர்?

விடைக்கு முயன்று பாருங்கள்
முடியாவிட்டால் 5ம் பக்கம் செல்லுங்கள்

## உலகில் அதிவேக ரயில்



உலகின் அதிவேக ரயிலை சீனா அண்மையில் அறிமுகப்படுத்தியுள்ளது.
மணிக்கு 394.2 கி.மீ.வேகத்தில் செல்லும் திறன் வாய்ந்த இந்த ரயில் தற்போது மணிக்கு 350 கி.மீ.வேகத்தில் இயக்கப்படுகிறது. கடந்த 2010ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11 ஆம் நாள் சீனாவில் உள்ள வூகான் நகரில் இருந்து குவாங்சோ என்ற நகருக்கு இந்த ரயில் இயங்கி வருகிறது.

## நெருப்பு விபத்தில் சிக்கிக் கொண்டீர்களா?

விபத்துகளிலேயே மிகவும் கொடியது நெருப்பில் சிக்கிக்கொள்வது தான் அவ்வாறு ஒருவர் நெருப்பில் சிக்கிக்கொண்டால் எவ்வாறு முதலுதவி செய்வது என்பதை தெரிந்துக் கொள்வோம்!
ஒருவர் தமது அலுவலகத்தில் தீ விபத்தின் பொழுது சிக்கிக்கொள்கிறார் என்று கொள்வோம்.
கூடியவரை, புகை பரவாத ஒரு அறைக்குள் புகுந்துகொண்டு விட வேண்டும். முடியுமானால் ஈரமான துணி எதையாவது கதவுக்கடியில் தரையில் விரித்து புகை பரவுவதைத் தடுக்க முயலவேண்டும் உடைகளில் நெருப்புப் பிடித்துவிட்டால், நெருப்பு சிறிய அளவுள்ளதாக இருப்பின் தரையில் படுத்து உருளலாம்.
வீடாக இருப்பின், கனத்த போர்வை, கம்பளி இவற்றைப் போர்த்துக் கொள்ளலாம். நெருப்பை அணைக்க முற்படுவீர்களானால் அது எந்த வகை நெருப்பு, அதாவது எதனால் உருவான நெருப்பு என்று அறிந்துகொண்டு செயல்பட வேண்டும்.
நெருப்பை அணைக்கப் போராடுகையில், நீங்கள் வெளியேற வசதியாக நின்று கொண்டு முயற்சி செய்தல் வேண்டும். நெருப்பு அதிகம் பரவுவது போல் தோன்றினால், நீங்கள் வெளிவந்து விடுவது உத்தமம்.
குறிப்பாக குழந்தைகள் பயமறியாதவர்கள் எனவே, அவர்கள் இத்தகைய விபத்தினை எளிதில் சந்திக்க நேரிடும். அவ்வாறு குழந்தைகள் நெருப்பு விபத்தில் சிக்கினால் அந்த வலியினை தாங்க கூடிய அளவுக்கு வலியற்றவர்களாக இருப்பார்கள். எனவே முடிந்தளவுக்கு குழந்தைகளை நெருப்பில் சிக்காமல் கவனித்துக்கொள்வது நல்லது. எனவே எந்த ஒரு விபத்தினையும் வருமுன் காப்பது சிறந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுக்கு சவால் 8

குறுக்கெழுத்துப் போட்டி (மாதநிலா குட்டீஸ்களுக்கானது)



**இடமிருந்து வலம்**

1. சந்தோஷப்பட்டாலும் வரும் கவலைப்பட்டாலும் வரும்
3. 'மாதநிலா' சஞ்சிகை இந்த மாவட்டத்தில் இருந்து தான் வெளிவந்துகொண்டிருக்கின்றது
5. இதைக்கண்டால் படையும் நடுங்கும் என்பார்கள்
7. பாட்டியின் கதை என்றால் இது தான் நினைவில் வரும்

**மேலிருந்து கீழ்**

2. யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு தீவு
4. இது இல்லாமல் வாணவில் இல்லை
6. உழைப்பிற்கு இதை ஒப்பிடுவார்கள்

குட்டீஸ்களே! விடைகளை கேள்வி இலக்கத்துடன் சேர்த்து எமக்கு அனுப்பி பரிசில்களை வெல்லுங்கள்

விடைகளை ஒரு வெள்ளைத்தாளில் எழுதி எங்களுக்கு அனுப்பிவையுங்கள். முற்றிலும் சரியான விடைகளை எழுதுபவர்களில், குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு பரிசில்கள் வழங்கப்படும்.

போட்டிகளில் பங்குபற்றி வெற்றிபெற்ற அனைத்து வெற்றியாளர்களும் 1ம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எமது தொடர்பிலக்கத்துடன் தொடர்புகொண்டு தங்களுடைய பரிசில்கள் சம்பந்தமான விபரங்களை அறிந்து பெற்றுக்கொள்ளலாம்.

**போட்டிகளுக்கான விடைகளை மட்டும் எங்களுக்கு அனுப்பி வையுங்கள் பயிற்சிகளை அனுப்பத்தேவையில்லை அவைகள் நீங்கள் செய்து பழக மாத்திரமே**

ஏப்ரல் மாதத்திற்கான அறிவுக்கு விருந்திற்கு ஏராளமான குட்டீஸ்கள் சரியான பதில்களை எழுதி அனுப்பி இருந்தார்கள். அவர்களுக்கு எங்களுடைய வாழ்த்துக்கள். அவற்றிலிருந்து குலுக்கள் மூலம் தெரிவு செய்து பரிசைப் பெறும் 3 குட்டீஸ்கள்.

**ஞா.ஞானப்பிரகாசம் துஷ்யந்தன்**
தரம்:5, மன்/புனித சவேரியார் ஆண்கள் பாடசாலை மன்னார்.

**முகமட் றிஷ்வான்**
தரம்: 6, பட்டானிசூர் முஸ்லிம் மகா வித்தியாலயம்

**ச.கபில்தேவ்**
தரம்:4, வ/பூந்தோட்டம் மகா வித்தியாலயம்

**1** மார்ச் மாதத்திற்கான வர்ணம் தீட்டும் போட்டியில் 1ம் இடத்தைப் பெற்று பரிசில்களை வென்ற போட்டியாளர் கிளிநொச்சி முழங்காவில் ஆரம்பப் பாடசாலையில் கல்வி கற்கும் **பா.கஜந்தன்** முழங்காவில்.

**2** 2ம் இடத்தைப் பெற்று பரிசில்களை வென்ற போட்டியாளர் வவுனியா நெளுக்குளம் கலைமகள் வித்தியாலயத்தில் தரம் 5 இல் கல்வி கற்கும் **செல்வி.நிரோஜா** நெளுக்கும், வவுனியா.

**3** 3ம் இடத்தைப் பெற்று பரிசில்களை வென்ற போட்டியாளர் வவுனியா கோமரசங்குளம் மகாவித்தியாலயத்தில் தரம் 4 இல் கல்வி கற்கும் **செல்வன்.டிலான்** சிதம்பரபுரம், வவுனியா.

## மாணவர் அரங்கம்

மாணவச் செல்வங்களே, 'மாணவர் அரங்கம்' என்ற பகுதியில் இணைய விரும்புகின்றீர்களா, அப்படியாயின் தங்களுடைய பெயர், முகவரி, தொ.பே.இல, பாடசாலை, வகுப்பு ஆகியவற்றை ஒரு வெள்ளைத்தாளில் எழுதி தங்களுடைய புகைப்படத்துடன் எங்களுக்கு அனுப்பி வையுங்கள்

**பெறுமதிமிக்க பெற்றோர்களே, வாசகர்களே!**

சிறுவர்களுக்காக தொகுத்து பரிசுகள் வழங்கப்படும் "வர்ணம் தீட்டி பரிசுகளை வெல்லுங்கள்" "அறிவுக்குச் சவால்" போன்றன எமக்கு கிடைக்கும் அதிகமான விண்ணப்பங்களில் மூவரைத் தெரிவு செய்து அவர்களுக்கு ஊக்கமளிப்பதற்காகவும், சந்தோஷத்திற்காகவும் மட்டுமே பரிசுப்பொருட்களை வழங்குகின்றோம். அவைகள் சிறுவர்களுக்காக மட்டுமே வழங்கப்படுகின்றன. அவர்களைப் பொறுத்தவரை திருப்திகரமாகவே இருக்கும் என்பதை நினைவுபடுத்த விரும்புகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலியல் நெறிபிறழ்வும் இன்றைய சமூகத்தின் பொறுப்பும்



**கார்த்திகா மணிவண்ணன்**
மாவட்டச் செயலகம்
வவுனியா.

**பாலியல் பிறழ்வுகள் ஏற்படுவதற்கான காரணங்கள்**

பாலியல் பிறழ்வானது உளவியல் சார்ந்ததாகவே கொள்ளப்படுகின்றது. பாலியல் பிறழ்வு வறுமைப்பட்ட சூழலில், குடும்பங்கள் நெருங்கி வாழும் தன்மையும், அடிக்கடி ஏற்படும் இடப்பெயர்வுகள். காரணமாகவும், பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையிலான ஈடுபாடின்மை, பெற்றோர்களுக்கிடையேயான தொடர் குடும்ப வன்முறைகள் மூத்தோர்களது பாலியல் நடத்தைகளைக் கண்டும் கேட்டும் ரசித்தும் கணவன் மனைவி இருவரில் ஒருவர் உறவை விரும்பாதபோது ஏற்படும் பிணக்குகளைப் பிள்ளைகள் பார்த்தல் என்பன நெறிப்பிறழ்வுக்குள் ஒருவரை இட்டுச்செல்கின்றது.

சினிமா மோகத்தினால் கவர்ந்திழுக்கப்படும் இளைஞர்கள் தன்மையும் சினிமாவில் வரும் பாத்திரங்களாகக் கற்பனை செய்து பாலியல் நெறிப்பிறழ்வுகளில் ஈடுபடுகின்றனர். சினிமாக்கள் இவ்வாறன செயற்பாட்டிற்குத் தூண்டுதளாக உள்ளனர். இவற்றினை விட நீலப்படம் பார்த்தல், பாலியலைத் தூண்டும் புத்தகங்கள், கதைகளைக் கேட்டல் என்பனவற்றில் ஏற்படுத்தும் அதீத ஆர்வமும் ஒருவரை பாலியல் நெறிபிறழ்வுக்கு இட்டுச் செல்கின்றது.

**பாலியல் நெறிப்பிறழ்வுகளுக்கான தீர்வுகள்:**

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? தொட்டில் பழக்கம் சுடுகாடு வரைக்கும் என்பன சிறுவயதில் நாம் கற்றுக் கொள்ளும் விடயம் இறப்புவரை நீடிக்கும் என்பதனை மனிதனது சமூகப்படுத்தலான பாடசாலை, குடும்பம், சமூகச்சூழல் முக்கிய பங்கு வகிக்கின்றன.

கல்வியறிவுடன் சமூக கலாசார விழுமியங்களைப் போதிப்பதுடன் பாலியல் கல்வி பற்றிய அறிவையும் எடுத்துக் கூற வேண்டிய பொறுப்பு பாடசாலைகளுக்கு உண்டு.

சமூகமட்டத்தில் இளைஞர் யுவதிகளை இணைத்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டும் பாலியல் தொடர்பான அறியாமையை நீக்கும் பொருட்டும் பாலியல் கருத்தரங்குகளை நடாத்துதல், பாலியல் நெறிபிறழ்வுகளில் ஈடுபடுவோரை நெறிப்படுத்தும் முகமாக உளவளத்துணை நிலையங்களை நிறுவி ஆலோசனை வழங்கி விழிப்படுத்தலை நடைமுறைப்படுத்தலும், இன்றைய சமூகத்தினது தொடர்புசாதனங்களுடன் கூடிய பொழுதுபோக்கினைத் தவிர்த்து சமூக அபிவிருத்தி சார்ந்த பொழுது போக்குகளில் நாட்டம் கொள்ள வைத்தல் போன்ற செயற்பாடுகளூடாக குடும்பங்களின் வழிகாட்டலும் சிறப்பாகப் பேணப்படும்போது இவ்வாறான நெறிப்பிறழ்வு நடத்தைகளிலிருந்து விடுபடமுடியும்.

**நீங்கள் தெரிந்திருக்க வேண்டிய விடயங்கள்**

நீங்கள் பாதுகாப்பற்ற சூழல் இருப்பதை உணர்கின்ற வேளையில் துன்பத்தைத் தரக்கூடிய நபர்களுடன் தனிமையாக இருப்பதையும் தவிர்த்துக் கொள்ள உங்களுக்கு பாதுகாப்பென இனங்காணும் இடத்தைத் தெரிவு செய்யுங்கள்.

உங்கள் மனதை அல்லது உடலைத் துன்பத்துக்கு உள்ளாக்கும் விதமாக எவரேனும் ஒருவர் தொடுவதற்கு முயற்சித்தால் வேண்டாம் என மறுக்கவும் உங்களுக்குரிய பாதுகாப்பினை உறுதிப்படுத்தவும் உங்களுக்கு உரிமையுண்டு.

(தொடரும்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆங்கிலச் சொல் தருக.

1. மக்கள் ..............................
2. மழை ..............................
3. எலி ..............................
4. சோகம் ..............................
5. இருபது ..............................
6. நகை ..............................
7. வங்கி ..............................
8. பலூன் ..............................
9. நேரம் ..............................
10. காயம் ..............................


## இடைவெளியை கீழ் உள்ள சொற்களை வைத்து நிரப்புக

1. அன்பாய் இருத்தலைக் காட்டிலும் உயர்ந்த.............................. வேறில்லை.
2. இறுதி வரை நின்று போராடுபவனுக்கே ..............................
3. மூட நம்பிக்கை .............................. ஒரு முட்டுக் கட்டை.
4. நம்பிக்கை இல்லாத இடத்தில் .............................. இருக்க முடியாது
5. வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும் வாசல் தோறும் .............................. இருக்கும்.

வெற்றி, முயற்சியும், அறிவு, வேதனை, அறிவுக்கு,

“இம்மாத குட்டிஸ்” நீங்களா,
அப்படியாயின் உங்களது
வர்ண புகைப்படத்துடன்
உங்களது பெயர், முகவரி, பாடசாலை,
வகுப்பு போன்ற விபரங்களுடன்
எங்களுக்கு
அனுப்பி வையுங்கள்,
தெரிவு செய்யப்படும்
புகைப்படம்
இம்மாத குட்டிஸ்
பகுதியாக அட்டையில்
பிரசுரிக்கப்படும்.

**(தரம் 7 ற்கு மேற்பட்ட மாணவர்கள் பங்கு பற்ற இயலாது)**



உன்னைப் பார்க்கும்
போதெல்லாம்
எனக்கு என்ன ஞாபகம்
வருது சொல்லு
பார்க்கலாம்?
என்ன.... என்ன...?
உன் தங்கச்சிதான்!

## விடுகதைகள்

1) கசப்புக்காரன் கலரில் மட்டும் பசப்புக்காரன் அது என்ன?
2) எங்கள் ஊர் இரும்பு ஏகப்பட்ட தூரம் மிதக்கும் அது என்ன?
3) நலம் பெற ஒரு நுறுக். அது என்ன?
4) எலும்பில்லாதவன் தான், வம்பில்லாதன் அல்ல. அது என்ன?
5) காட்டுக்குள்ளே நின்றவனைக் கூட்டிச் சேர்த்தால் சுத்தத்துக்கு உதவுவான் அது என்ன?
6) தங்கம் நடுவே வைரக்குவியல்கள் அது என்ன?
7) காவலுக்குக் கெட்டிக்காரன். காச் மூச் சத்தக்காரன் அது என்ன?
8) மேலே வெட்டவெளி, கீழே பொட்டல் வெளி, நடுவில் தண்ணீர் பந்தல், அது என்ன?
9) முள்ளுக்கட்டை, அதைத் தாண்டினால் இனிப்புக்கூடு.- அது என்ன?
10) சுற்றிச் சுற்றி வருவான், சுற்றிலும் இருப்பான். ஆனால், இவனை உணராலாமே தவிர பார்க்க முடியாது. அது என்ன?

என்ன குட்டீஸ்களே! விடைகளை கண்டுபிடிக்க முடியவில்லையா? 30ம் பக்கம் செல்லுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக நாடுகளில் சிங்கப்பூர்

தென்கிழக்கு ஆசியாவில் மலேயா தீபகற்பத்தின் தென்முனையை அடுத்துள்ள தீவு

தலைநகரம் சிங்கப்பூர்

மலாய், ஆங்கிலம், சீனம் (mandarin) , தமிழ் ஆகிய மொழிகள் பேசப்படுகின்றன

உலகின் மிகப் பரபரப்பான இரண்டாவது துறைமுகத்தினைக் கொண்டது

நாணயம் டாலர்

9.08.1965 இல் மலேசியாவிலிருந்து பிரிந்து விடுதலை பெற்று தனிக் குடியரசு நாடானது.

லீ ஹசியன் லூங் (Lee Hsien Loong) பிரதமராக உள்ளார்.

1819 ஆம் ஆண்டு ஸ்டாம் போர்ட் ராப்பில்ஸ் என்பவரை ஆங்கில அரசு சிங்கப்பூருக்கு அனுப்பியது. இன்றைய சிங்கப்பூருக்கு அடித்தளமிட்டவர் இவரே. தமது அறிவாற்றலாலும், திறமையாலும் சுல்தானிடமிருந்து சிங்கப்பூரைக் குத்தகைக்கு வாங்கினார். ஆங்கிலேயர் துறைமுகம் அமைத்து, சுங்க வரி, ஏற்றுமதி இறக்குமதி வரிகள் இல்லையென அறிவித்தனர். இதனால் வேகமான வளர்ச்சியினைக் கண்டு, 1824 இல் நாட்டைச் சொந்தமாக்கிக் கொண்டனர். சூயஸ் கால்வாய் திறக்கப்பட்டது. சிங்கப்பூர்த் துறைமுகம் ஐரோப்பாவைத் தென்கிழக்கு ஆசியாவுடன் இணைக்கும் பாலமானது.

இரண்டாம் உலகப் போரில் எதிர்பாராத தாக்குதலை நிகழ்த்தி 1942 பிப்ரவரி 15 இல் ஜப்பானியர் கைப்பற்றினர். 3 1/2 ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் ஆங்கிலேயர் ஆட்சியை நிலைநிறுத்தினர். 31.8.1957 இல் மலேசியாவும் மலேசியக் கூட்டணியில் இருந்த சிங்கப்பூரும் விடுதலை பெற்ற நாடுகளாகின. மலேசியக் குடியரசில் ஒரு மாநிலமாகவே சிங்கப்பூர் இருந்து வந்தது. 1963 இல் இந்தோனேசியா படையெடுத்த போது வலிமையான கூட்டணியில் இருந்தாலும் மலேசியப் பிரதமர் துங்கு அப்துல் ரகுமானுக்கும், லீ குவான் யூ தலைமையிலான மாநில அரசுக்கும் முரண்பாடு வளர்ந்துகொண்டே இருந்தது. இனி ஒன்றுபட்டு இருக்க முடியாது என்ற நிலை – பிரிவினை தவிர்க்க முடியாதது என்ற நிலை உருவானது.

1959 இல் நடைபெற்ற தேர்தலில் லீ குவான் யூ கட்சி வெற்றிபெற்று லீ பிரதமரானார். சிங்கப்பூர் மலேசியக் கூட்டணியிலிருந்து விலகியதும் சிங்கப்பூர் தனித்து வாழமுடியாது மனித வளம் மட்டுமே உள்ளது மண் வளம் ஏதுமில்லை என்று உலகமே கூறியது. மனித வளத்தினை மட்டுமே கொண்டு சிங்கப்பூரை வாழ வைக்க முடியும் என நிரூபித்த பெருமைக்குரியவர் லீ குவான் யூ.

1965 ஆகஸ்ட் 9 முதல் சிங்கப்பூர் சுதந்திர ஜனநாயக இறையாண்மை நாடாக விளங்கும் என அறிவித்தார் லீ. உலக நாடுகள் அவையிலும் காமன்வெல்த் நாடுகள் அவையிலும் உறுப்பு நாடாக விளங்குகிறது.

**சிங்கப்பூரின் சிறப்புகள்**

நல்ல நாகரிகத்தினைக் கொண்ட மக்களைக் கொண்ட நாடு. நடைபாதையில் வசிப்பவர்களோ, பிச்சைக்காரர்களோ கிடையாது. சாலைகளில் மேடு பள்ளங்களையோ, குப்பைக் கூளங்களையோ பார்க்க முடியாது. கழிவுநீர் தேங்கும் பிரச்சினையும் இல்லை. தண்ணீர், மின்சாரத் தட்டுப்பாடு என்பது எப்போதுமில்லை. மலேசியாவிலிருந்துதான் தண்ணீரினைக் கொண்டு வருகிறார்கள். எந்தச் சிக்கலை வைத்தும் தண்ணீர் தர மறுப்பதில்லை மலேசியா. நடிகர்கள், திரைப்படங்கள் உண்டு. ஆனால், விளம்பரத் தட்டி என்ற பேச்சுக்கே இடமில்லை. சுவர்களில் எந்தவிதமான விளம்பரத்தையும் பார்க்க முடியாது. எதிலும் ஒழுங்கு, தூய்மையைக் கடைப்பிடிக்கின்றனர். ஊழல் முழுவதும் ஒழிக்கப்பட்டுள்ளது. சட்டத்தை மதிக்கின்றனர் சாலை விதிகளைப் பின்பற்றுகின்றனர். சாலை விதிகளை மீறுவோருக்கு முதலில் தண்டனை கொடுக்கப்படுகிறது. தவறு தொடர்ந்தால் ஓட்டுநர் உரிமம் ரத்தாகிவிடும். பெண்களிடம் குறும்பு செய்வோருக்குக் கடுமையான தண்டனை விதிக்கப்படுகிறது. தெரியாமல் யாரேனும் சாலையில் குப்பைகளைப் போட்டாலும் 500 டாலர் அபராதம் வசூலித்துவிடுவார்களாம். குழந்தைகளைத் தண்டிக்கும் உரிமை பெற்றோர்களுக்குக்கூடக் கிடையாது.

**மொழி**


தேசிய மொழியாக மலாயும், ஆட்சி மொழியாக ஆங்கிலமும் உள்ளன. தேசிய கீதம் முன்னேறட்டும் சிங்கப்பூர் என்ற ஆரம்பத்துடன் மலாய் மொழியில் இயற்றப்பட்டுள்ளது.

**இராணுவம்**

பள்ளிப் படிப்பினை முடித்ததும் 3 ஆண்டுகள் கட்டாய இராணுவப் பயிற்சி பெறுகின்றனர். பின்பு, அவர்கள் விருப்பப்பட்டால் இராணுவத்தில் தொடரலாம் அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மேல்படிப்பு படிக்கலாம் அல்லது வேலையில் சேரலாம். சிறப்பாகப் பயிற்சி செய்தவர்களுக்கு வெளிநாடுகளில் பல துறைப் பயிற்சி பெற அரசு பண உதவி செய்கிறது. எனவே, நவீன ஆயுதங்களுடன் கூடிய வலிமையான இராணுவத்தைக் கொண்ட நாடாகத் திகழ்கிறது.

**வேளாண்மை**

ரப்பர் தோட்டங்கள் நிறைய உள்ளன. காய்கறி, பழங்கள் விளைகின்றன. அலங்கார மீன்களை வளர்த்து விற்பனை செய்கின்றனர். போக்குவரத்துச் சாதனங்கள், இயந்திரங்கள், கட்டுமானப் பொருள்கள், எலக்ட்ரானிக் பொருள்கள் ஆகியன ஏற்றுமதியாகின்றன. சுற்றுலாத் தலங்கள்

புகிட் டிமாக் நேச்சர் ரிசர்வ்டீரமவை Timah Nature Reserve) சாங்கி சேபல் மியூசியம் (Changi Chapel Museum), சென்டோசா அய்லேண்ட் (Sentosa Island), ஜூரோங் பறவைகள் பூங்கா (Jurong Birds Park), நைட் சபாரி(Night Safari),, பொட்டானிக் கார்டன்.

இது எப்படி இருக்கு?



## யாழ்.குருநகரை உலுக்கிய

## ஜெரோமி கொன்சலிற்றாவின்

# மரணம்

யாழ். குருநகர்ப் பகுதியில் கிணற்றில் இருந்து 14.04.2014 அன்று சடலமாக மீட்கப்பட்ட யுவதி ஜெரோமி கொன்சலிற்றாவின் மரணம் தொடர்பான வழக்கு இம்மாதம் 12ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என யாழ். நீதிமன்ற நீதவான்



சிவகுமார் தெரிவித்துள்ளார்.

சமூக நலநோக்கோடு கூறிக்கொள்ள விரும்புகின்றோம் குறித்த யுவதியின் மரணத்திற்கு யார் காரணமோ அவர்களுக்கு தகுந்த தண்டனை வழங்கவேண்டுமென்றும் ஜெரோமி கொன்சலிற்றாவின் ஆத்மாவிற்கு நித்திய இளைப்பாற்றை கொடுக்கவேண்டும் என்றும் இறைவனைப் பிரார்த்திப்போமாக. மேலும் இதுபோன்ற செயல்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கும் அதனைச் சார்ந்த அனைத்து சமூகத்திற்கும் ஒரு பாடமாக அமையவேண்டும் என கூறி குறித்த யுவதியின் இழப்பை தாங்கமுடியாமல் தவிக்கும் குடும்பத்தினருக்கு "மாதநிலா" நிர்வாகத்தினர் சார்பாக எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதநிலா குட்டீஸ்

## சிறுகதை

# அறிவுரை யாருக்கு?

ஒரு மரத்தில் குருவிகள் இரண்டு தன் குஞ்சுகளுடன் வசித்து வந்தன. அதே மரத்தில் குரங்கு ஒன்றும் வசித்து வந்தது. குஞ்சுகள் சிறிது பெரிதானது. தாய்க்குருவி இரைதேடச் சென்றதும் கூட்டிலிருந்து மெதுவாக வெளியில் எட்டிப் பார்த்தன.

பின்பு, கூட்டைவிட்டு வெளியில் நடந்து வந்து கிளையில் அமர்ந்தன. அப்போது அங்கு குரங்கு அமர்ந்திருப்பதைக் குருவிக் குஞ்சுகளும், குருவிக் குஞ்சுகளைக் குரங்கும் பார்த்தாலும், அதனதன் வேலைகளைச் செய்து வந்தன.

அந்த ஆண்டின் மழைக்காலம் ஆரம்பமானது. மழை பெய்யத் தொடங்கியதும் குருவிகளும், குஞ்சுகளும் கூட்டினுள் சென்று நனையாமல் அமர்ந்து கொண்டன. மரக்கிளையில் நனைந்தபடி குரங்கு அமர்ந்திருந்தது.


இதனைப் பார்த்த குஞ்சுகளுள் ஒன்று, தாய்க்குருவியைப் பார்த்து, ஏன் அம்மா குரங்கு மட்டும் மழையில் நனைந்து கொண்டிருக்கிறது? குரங்குக்கு வீடு இல்லையா? அதற்குக் குளிராதா எனக் கேட்டது.

குரங்குக்கு வீடு கட்டத் தெரியாது என்றது தாய்க்குருவி. இதனைக் கேட்ட குருவிக் குஞ்சு, அதற்குத் தெரியாவிட்டால் என்ன, நாம் சொல்லிக் கொடுப்போம் என்றது.

குரங்குக்குப் பிரித்துப் பிய்த்துப் போடத்தான் தெரியும். அதற்கு எப்போதும் அழிக்க மட்டுமே தெரியும், உருவாக்கத் தெரியாது என்றது தாய்க்குருவி. அம்மா, அப்படிச் சொல்லாதீர்கள். முயற்சி செய்வோம். குரங்கும் புரிந்து கொண்டு திருந்தும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது என்றது.

இதனைக் கேட்ட தாய்க்குருவி மூடருக்கு அறிவுரை சொல்லி நேரத்தை வீணாக்கக் கூடாது என்றது. மூடருக்குத்தானே அம்மா அறிவுரை கண்டிப்பாகத் தேவை என்றது. அதற்குமேல் உன் விருப்பம் என்று ஒதுங்கியது தாய்க்குருவி.

கூட்டிலிருந்து வெளியே வந்த குருவிக் குஞ்சு குரங்கின் அருகில் நனைந்து கொண்டே அமர்ந்தது.




இதனைப் பார்த்த குரங்கு, உனக்குத்தான் கூடு இருக்கே எதற்காக நனைகிறாய், உள்ளே போ என்றது.

எனக்குக் கூடு இருக்கு, உள்ளே போறேன். ஆனால், நீ நனைவது எனக்கு வருத்தமாக உள்ளது. நீயும் கூடு கட்டி வசித்தால், எங்களைப் போல் நனையாமல் இருக்கலாமே என்றது.

இதனைக் கேட்ட குரங்கு, உனது உருவம் சிறியது. சின்னக் கூடு போதும். வீட்டின் சுவர்களில் உள்ள பொந்துகளில்கூட இருந்துவிடலாம். என் உருவமோ பெரியது, அதனால் இதெல்லாம் ஒத்து வராது. நீ நனையாமல் உள்ளே போ என்று கத்தியது.

நான் நனைவதைப் பர்த்து நீ இப்ப எப்படி வருத்தப்படுற, அதேபோல்தான் எனக்கும் நீ நனைவது வருத்தமாக உள்ளது. எனது உருவம் சிறியதுதான். அதற்கேற்பத்தானே எனது கால்களும் வாயும் உள்ளன. எனது சிறிய வாயினாலும் கால்களினாலும் எனக்குக் கூடுகட்டத் தேவையானவற்றை எடுத்து வர வேண்டும். உனக்குப் பெரிய உருவம். அதற்கேற்றாற்போல 4 கால்கள், அதில் முன்னங்கால்கள் இரண்டையும் கைகளைப்போல அழகாகப் பயன்படுத்துகிறாயே. அதை வைத்தே உனக்கு வீடுகட்டத் தேவையான பொருள்களை எடுத்து வரலாமே. மழை நின்றதும் முதலில் வீடு கட்டு. உனக்குத் தேவையான உதவியை நானும் செய்கிறேன். மழை பெய்யும்போது இப்படி நனைந்து துன்பப்படாமல் பாதுகாப்பாக இருக்கலாம் என்றது.

இதனைக் கேட்ட குரங்கு, மழை விடட்டும் முதல் வேலையாக எனது இருப்பிடத்தை நானே உருவாக்கிக் கொள்கிறேன். நீ போய் உன் கூட்டினுள் பாதுகாப்பாக இரு என்றது.



**நேரத்தை, வீணாக்கும் போது கடிகாரத்தைப் பார்! ஓடுவது முள் அல்ல உன் வாழ்க்கை...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாம்பு புற்றா? கரையான் புற்றா?

மண் புற்றுகளை எங்காவது பார்த்தால் அதனைப் பாம்புப் புற்று என்கிறார்கள். பாம்புகள் புற்றுகளில் வாழ்வதாக நினைக்கிறார்கள். உடனே அங்கே புற்று நாகாத்தம்மா கோயில் உருவாகிவிடுகிறது. மூடநம்பிக்கையாளர்கள் அங்கு குவிந்துவிடுகின்றனர். ஆனால், உண்மை என்ன தெரியுமா? பாம்புகள் புற்றுகளைக் கட்டுவதுமில்லை அதில் நிரந்தரமாக வாழ்வதும் இல்லை. பின்பு எதற்காக பாம்புகள் புற்றுக்குள் நுழைந்து வெளியில் வருகின்றன என்ற கேள்வி எழலாம்.


புற்றுகள் கரையான்களால் உருவாக்கப்படுபவை. கரையான்கள் கோடிக்கணக்கான முட்டைகளையிட்டு, தன் இனத்தைப் பெருக்கும் இயல்புடையவை. தாய்க் கரையான் இந்தப் புற்றுகளில் தனியான ஓரிடத்தில் இருக்கும். அது, கொழு கொழுவென்று வளர்ந்து பார்ப்பதற்கு மிகப் பெரிதாக இருக்கும்.

பாம்புக்கு மிகப் பிடித்தமான உணவுகளுள் ஒன்றே இந்தத் தாய்க் கரையான். அதனை உண்பதற்காவே பாம்பு புற்றுக்குள் சென்று வருகிறது. கரையான் புற்றைத்தான் பாம்புப் புற்று என்று தவறாக எண்ணிக் கொண்டு, அதற்குள் பாலையும் ஊற்றி பூஜை செய்து வருகின்றனர் அறியாத நம் மக்கள்.

மேலும், பாம்பு பாலை நக்கியோ உறிஞ்சியோ குடிப்பதும் கிடையாது. ஏனென்றால், பாம்பின் நாக்கு பிளவுபட்டிருக்கும். இதனால், பாம்பினால் உறிஞ்சிக் குடிக்க முடியாது. தான் பிடிக்கும் இரையைக் கடித்துத் துண்டாக்கிக்கூடச் சாப்பிடாமல் அப்படியே விழுங்கிவிடக் கூடியது பாம்பு. அந்த இரையிலிருந்தே தேவையான தண்ணீர் பாம்புக்குக் கிடைத்துவிடுவதால் தனியாக எதையும் அருந்துவதுமில்லை. பாம்புக்கு மேல் இமையும் கிடையாது. காதும் கிடையாது. நிலத்தில் ஏற்படும் அதிர்வுகளைக் கொண்டே அருகில் வரும் எதனையும் உணர்ந்துகொள்கிறது. மகுடியின் இசையைக் கேட்டு பாம்பு ஆடுவதில்லை. பாம்பாட்டியின் உடலசைவிற்கு ஏற்பத்தான் ஆடுகிறது. இதுதான் உண்மை. இந்த நேரத்தில் உங்களுக்கு ஒரு பழமொழியை நினைவு கூறலாம். நம் கிராமங்களில், கரையான் புற்றெடுக்க கருநாகம் குடிகொண்டதைப் போல என்று கூறுவார்கள். இதிலிருந்தே தெரிகிறதே. கரையான்தான் புற்றைக் கட்டுகிறது என்று.

## எதிர்ப்பாற் சொல் தருக.

1. வீரன் ....................
2. சேவல் ....................
3. மழை ....................
4. மானம் ....................
5. அலங்காரம் ....................
6. எதிர் ....................
7. தொலைவு ....................
8. ஊக்கம் ....................
9. அவன் ....................
10. காய் ....................



மேலே உள்ள படத்தைப் பார்த்து கீழே உள்ள கட்டத்தில் வரைக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்கொரிய கடலில், பயணிகளை காப்பாற்றாமல் விட்ட கப்பல் ஊழியர்களின் செயல்பாடு கொலை செய்ததற்கு சமம் என்று தென்கொரிய அதிபர் பார்க் ஜியோன்ஹுஹி கடுமையாக விமர்சித்துள்ளார். கடந்த 15.04.2014 அன்று தென்கொரிய கடலில் விபத்துக்குள்ளான கப்பலில், 238 மாணவர்களை காணவில்லை. இதுவரை, 108 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. கப்பல் விபத்து தொடர்பாக, கேப்டன் லீ ஜுன்ஹுசியோக் (69) மற்றும் 2 துணை கேப்டன்கள் கைது செய்யப்பட்டனர். இதுதொடர்பாக, தென்கொரிய அதிபர் ஜியோன்ஹுஹி கூறுகையில், கப்பல் ஊழியர்களின் பொறுப்பற்ற செயல் கொலைக்கு சமமாக உள்ளது. கப்பல் கேப்டன் மற்றும் ஊழியர்களின் செயல்பாடுகள் புரிந்துகொள்ள முடியாத அளவுக்கு உள்ளது. இது, கொலை செய்வதற்கு சமமாகும் என்று கடுமையாக விமர்சித்துள்ளார். கப்பலில் போதுமான மீட்பு படகுகள் இல்லை. மேலும், பயணிகள் தப்புவதற்கு முன்னரே கப்பல் கேப்டன் லீயும், துணை கேப்டனும் கடலில் குதித்துள்ளனர். பயணிகளை மீட்பதில் அவர்கள் அக்கறை காட்டாதது ஏன்? என்ற கேள்வி எழுந்துள்ளது. கப்பல் மூழ்கும்போது பயணிகள் தங்களைக் காப்பாற்றும்படி அழுதுள்ளனர். அதையும் மீறி, கப்பலை விட்டு கேப்டன் லீ ஏன் விலகினார் என்ற சந்தேகம் எழுந்துள்ளது. தற்போது, மாணவர்கள் கல்வி பயிலும் அன்சானில் உள்ள பள்ளி வெறிச்சோடிப் போயுள்ளது. ஏற்கனவே, விபத்தில் இருந்து மீண்ட துணை முதல்வரும் தற்கொலை செய்துகொண்டார். எனவே, கப்பல் விபத்தில் மர்மம் நீடித்துள்ளது. ஜிண்டோ துறைமுகத்தில் அழுதபடி காத்திருக்கும் பெற்றோர்கள், எங்களது கனவில், எங்களது குழந்தைகளின் அபயக்குரல் கேட்பதாக கண்கலங்கியபடி கூறிவருகின்றனர். எங்களது குழந்தைகளைத் தாருங்கள் என்று வலியுறுத்தி வருகின்றனர். அவர்களுக்கு எவ்வாறு ஆறுதல் அளிப்பது? என்று தென்கொரிய அரசு பரிதவித்து வருகிறது.


**மூழ்கியது**

இந்தக்கப்பல் தனது பயணத்தின் நடுவழியில் நேற்று சற்றும் எதிர்பாராத வகையில் மூழ்கத்தொடங்கியது. கப்பலில் இருந்தவர்கள் அலறினர். தவித்தனர். இதுதொடர்பாக உடனடியாக தென்கொரிய கடலோரக்காவல் படைக்கு சிக்னல் அனுப்பப்பட்டது.

சிக்னல் கிடைத்ததும் கடலோரக் காவல்படை மற்றும் கடற்படையின் 100 கப்பல்களும், படகுகளும், 18 ஹெலிகாப்டர்களும் சம்பவ இடத்துக்கு விரைந்தன. ஆனால் அந்தக்கப்பல் ஒரு பக்கமாக சாயத்தொடங்கியதுமே, அது மூழ்கி விடும் என கருதி பல மாணவர்கள் உயிர் பிழைக்கும் ஆவலில் கடலில் குதித்தனர்.

**தப்பிய மாணவன் உருக்கம்**

இந்த கப்பல் விபத்தில் உயிர் பிழைத்த மாணவன்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தென்கொரிய கப்பல் விபத்தில் மர்மம் கப்பல் கேப்டனின் செயல் கொலை செய்ததற்கு சமம்


## தென்கொரிய அதிபர் குற்றச்சாட்டு

இந்தக்கப்பல் மூழ்கியதற்கான காரணம் உடனடியாக தெரியவில்லை. இருப்பினும், கப்பலில் பயணித்த பயணிகளில் ஒருவர் சம்பவம் பற்றி கூறும்போது, "ஒரு பயங்கரமான சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து கப்பல் நின்று விட்டது. நின்றதும் சரிந்து மூழ்கத்தொடங்கியது" என்றார். எனவே நாசவேலை ஏதாவது நடந்திருக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

ஒருவன் கூறுகையில், "நான் மீட்கப்பட்டு விட்டடேன். கப்பல் சரியத்தொடங்கியதும், நாங்கள் யாரும் நகரவில்லை. நாங்கள் நகர்ந்தால் அது ஆபத்து என்று சொல்லிவிட்டார்கள். எனது நண்பர்களும், சக மாணவர்களும் வெளியேறும் பாதையை தண்ணீர் சூழ்ந்து கொண்டதால் தப்பிக்க முடியாமல் அகப்பட்டுக் கொண்டனர்" என அழுது கொண்டே கூறினான்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரிய வீட்டு கமலி

–காதல் தொடர்கதை

"இல்ல மாமா, வேணாம். விட்டுருங்க. எனக்கு இஷ்டம் இல்லே" வாழ்நாள் முடியிர வரைக்கும் இனிமேல் இந்தத் தெரு பக்கம் வரவே கூடாது என நினைத்தபடி என்றபடி ஆக்ஸிலேடரை மிதித்தேன்.

வீட்டைப் பார்த்து வந்தவுடன் ஒரு வாரம் அதே ஞாபகமாய் இருந்து, பிறகு எப்போவாவது நினைத்து, அப்புறம் நினைக்க மறந்தும் போய் இரண்டு வருசமாச்சு. புது வருசம் அன்னிக்கு கண்டிப்பாக கோவிலுக்கு போவது பழக்கம். இது சின்ன வயசுல இருந்தே இருந்தாலும், அமெரிக்கா வந்தும் தொடருது.

"டொயிங்க்"

சத்தம் கேட்டு திரும்பி பார்த்தேன், சிரித்தபடி ஒருவர் அருகில் வந்தார். எங்கேயோ இவரை.. இல்லை இவனை.. அட சுப்பு. பள்ளித்தோழன். நான் முதல் பெஞ்ச் என்றால் இவன் மூன்றாவது பெஞ்ச். 'என்னடா அன்பு? எப்படி இருக்க? இந்த மாநிலம்னு தெரியும், ஆனா இந்தக் கோயிலுக்கு வருவேன்னு தெரியாதேடா' ஏதோ ஒரு வாரம் பழக்கம் விட்டுப்போனது போல பேசினான். பிறகு அளவளாவியதில், அவன் என்னோட முகவரி கூட தெரிந்து வைத்திருக்கிறான், ஆனால் பேச மட்டும் செய்யவில்லே. நானும் காரணம்

கேட்கவில்லை. 10 நிமிசம் பேசியதில் பல வருடம் விட்டுப் போன விசயங்கள் பரிமாறிகிட்டோம். இப்பொழுதுதான் இந்த மாநிலம் வந்திருக்கிறானாம். 'கமலிகூட இங்கேதாண்டா? தெரியுமா?' என்றபோது என்ன சொல்வதென்றே தெரியவில்லை. ஏன் அவளைப் பற்றி விசாரிக்கவில்லை என்றும் கேட்டான். என்ன சொல்வதென்று தெரியவில்லை.

'இங்கேயிருந்து 60 மைல்தாண்டா, ஒரு எட்டு போய் பார்த்துட்டு வா. ஒரு பொண்ணு, ஒரு பையன், இஞ்சினியர் மாப்பிள்ளை, 5 படுக்கையறை கொண்ட வீடுன்னு ஜம்முன்னு இருக்கிறாடா. பெரிய வீடாச்சே, சும்மாவா பொண்ண குடுத்திருப்பாங்க?' 'ம்ம்' என்று மட்டும் சொன்னேன். அவளுடைய விவரம் எல்லாம் அலைபேசியிலேயே மாறியதற்கும் என் குடும்பம் நவகிரகம் சுற்றி வரவும் சரியா இருந்தது.

அடுத்த வாரமே சுப்புவின் வீட்டிற்கு போனோம், பழைய விசயங்களை எல்லாம் பேசியபோது சுப்பு

'என்னடா கமலி விசயம் வீட்டிற்கு தெரியுமா?' என்று காதில் குசுகுசுத்தான். என் வீட்டுக்காரம்மாவோ இந்த மாதிரி விசயத்தில் கெட்டி. 'என்னண்ணே? பெரிய வீட்டுப் பொண்ணப் பத்தி

கேட்குறீங்களா?' என சுப்புவை கேட்கவும், மீதியிருந்த சரக்கை ஒரே கல்பில் அடித்து முடித்தான் சுப்பு. 'அடுத்த வாரம் போலாம்னு இருக்கோம்ணே' என்றதும், மீதியிருந்த சரக்கை ஒரே கல்பில் அடித்து முடித்தேன். 'என்னைக் கேட்காமல் எப்படி முடிவெடுக்கலாம், அதுவும்..' ஆமா, உங்களைக்கேட்டுத்தான் எல்லாம் முடிவெடுக்கிறோமாம்' இது சுப்புவின் விட்டம்மா. இப்படிச் சொல்வதில் வீட்டம்மாக்களுக்கு என்றுமே குஷிதான், கும்மாளம்தான்.

வீட்டிற்கு வரும் வழியில்தான் வீட்டம்மாவைக் கேட்டேன் 'என்ன நெசமாத்தான் சொல்றியா? நான் இன்னும் அவகிட்ட பேசக்கூட இல்லே. அப்புறம் எப்படி அடுத்த வாரம் போறது' 'அட பேசுங்க, கேளுங்க, இதெல்லாம் ஒரு விசயம்னு. மண்டையில முடி கொட்டினதக்கப்புறம் என்ன வெட்கம்?' சரிதான். எனக்கும் இன்னும் ஒருவித தயக்கம் இருந்திகிட்டே இருக்கு. எங்கே ஆரம்பிக்கன்னு தெரியல. அடுத்த நாள் அலுவலகம் கிளம்புகையில், வீட்டம்மா 'அடுத்த வாரம் அங்கே போறோம்தானே?'.

'உனக்கு ஏன் இவ்வளவு வேகம்?'

'அட நீங்க பார்த்து ஜொள்ளுவிட்ட பார்ட்டி, எப்படித்தான் இருக்கும்னு பார்க்கவேணாமா'.

இந்த மனைவிமார்களுக்கு மட்டும் புருசன் சைட் அடிச்சாலோ, காதலிச்சாலோ பொறாமைய விட அவுங்க எப்படி இருப்பாங்கன்னு பார்கிறதுல ஆர்வம் அதிகம். மதியம் 2 மணிக்கு அலைபேசியில் Mrs. Kamali Senthil என்ற எண் பார்த்து அழைக்கும் போது கை நடுங்கியது. ரெண்டாவது மணியில்,

"ஹலோ" அமெரிக்க உச்சரிப்பில் ஒரு பெண்மணி பேச,

நானும் கமலிகிட்ட பேச முடியுமா என்று கேட்டேன்.

'நீங்க?

(தொடரும்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரிஎலெக்ரோனிக் சுப்பர் மார்க்கட்

எலெக்ரோனிக் வகைகள்
சோபாசெற் தளபாட வகைகள்
அன்ரெனா டிஸ் அன்ரெனா
புதிய இணைப்புக்கள்
சகலவித றீசார்ஜ் இணைப்புக்களும்
மற்றும்
கடன் அட்டை மாஸ்ரர் காட்
போன்ற வசதிகளும் உண்டு

பொருட்கள் கடன் அடிப்படையிலும் பெற்றுக் கொள்ளலாம்




மலிவு!
தரம்!
மனம் நிறைந்த சேவை!

Tel: 024 5671354, Fax:024 2226469
Mob:077 6143500
web: girielectronics.lk

அனுப்பி வைக்கவேண்டிய முகவரி

ஆசிரியர்
"மாதநிலா"
172B, மில் வீதி, வவுனியா.

குலுக்கள் நடைபெறும் இடமும் காலமும்
கிரி எலெக்ரோனிக் சுப்பர் மார்க்கட் – 286, கண்டி வீதி, வவுனியா
2014.05.26 மாலை 5.00 மணி

வவுனியா நகரில் எலெக்ரோனிக் பொருட்களின் அரசன்

## கிரி எலெக்ரோனிக் சுப்பர் மார்க்கட்

கிரி எலெக்ரோனிக் சுப்பர் மார்க்கட் தமது வாடிக்கையாளர்களுக்கு விசேட விலைக்கழிவுகளுடன் இலகுதவணை கொடுப்பனவுடனும் பொருட்களை வழங்குகின்றார்கள்

எலெக்ரோனிக் பொருட்கள் வாங்க வேண்டுமா? எங்கும் செல்லத்தேவையில்லை!

உடன் விரையுங்கள்

'வவுனியா கண்டி வீதியில் எலக்ரோனிக் கடல்' கிரி எலெக்ரோனிக் சுப்பர் மார்க்கட்

மாதந்தோறும் எமது சஞ்சிகையை பெற்றுக்கொள்ளும் மூன்று அதிஸ்டசாலிகளுக்கு கிரி எலெக்ரோனிக் சுப்பர் மார்க்கட் பெருமையுடன் அள்ளி வழங்கும் **பரிசுக் குவியல்**

2014.05.24ம் திகதிக்கு முன் கிடைக்கும் கூப்பன்களை சேகரித்து குலுக்கல் முறையில் தெரிவு செய்து மூன்று அதிஸ்டசாலிகளுக்கு சிறந்த பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படும்

எமது சஞ்சிகையுடன் செல்பவர்களுக்கு கிரி எலெக்ரோனிக் சுப்பர் மார்க்கட் பொருட்களுக்கு 20% விலைக்கழிவு வழங்குகின்றார்கள்

# சினிமா

## கமலுக்கு இது தேவைதானா,?

கமல் என்றாலே நல்ல நடிகர்,சினிமாவில் புது முயற்சிகளின் பிரம்மா, சர்ச்சைகளின் நாயகன் என்பது எல்லோரும் அறிந்தது. கமல் இருக்கும் இடத்தில் சர்ச்சை இருக்கும் என்று பத்திரிக்கைகள், ஊடகங்கள் சொன்னதாலோ என்னவோ அதையே தனக்கு சாதகமாக கமலும் பயன்படுத்த தொடங்கி விட்டார். எந்த எதிர்மறை விமர்சனங்கள் வந்தாலும் அதை தனக்கு சாதகமாக மாற்றிக்கொள்ளும் வித்தை கற்றவரைப் போன்றும் தம்மை ஒரு சகலகலா வல்லவனாகவும், எதிரில் இருப்பவனை முட்டாளாக பார்க்கும் மனநிலையையும் வளர்த்துக் கொண்டு வந்து விட்டார்.

இது அவர் தொடங்கிய, முடித்த ஏனைய படங்களுக்கு பொருத்தம். கமல் தன் ஏனைய படங்களில் நேரடியாக சொல்லாமல் மறைமுகமாக தன் மனத்தில் ஒளித்து வைத்திருக்கும் சாதி மத வன்மங்களை வெளிக்காட்டி இருக்கிறார். தன்னை முற்போக்காளனாக வெளியில் காட்டி பிற்போக்குத்தனத்தை விதைத்திருக்கிறார். கட்டியணைத்தல், முத்தம் கொடுத்தல் போன்ற காட்சிகளை மட்டும் நேரடியாக காட்டி அந்தரங்க நாயகனாக அலட்டிக் கொண்டிருக்கிறார்.



படத்தில் புதுமையும் பண்ணுவார், சாதிசண்டைகள் வரவைத்து புரட்சியும் பண்ணுவார்.. இதற்கு தேவர் மகன் முதல் விருமாண்டி வரை ஏனைய படங்கள் அடையாளம்.
சமூகத்தைப் பற்றிய அக்கறை அற்ற கமலுக்கு தன் பெயர் விளங்க வேண்டும், தன் பாக்கெட் நிரம்ப வேண்டும் என்பதே ஆண்டாண்டுகாலமான எதிர்ப்பார்ப்பு. ஆனால் வெளியில் காட்டிக்கொள்வதென்னவோ கலைக்காக உழைப்பவர், கலைக்காக வாழ்பவர் , கலைக்காக சாகவும் துணிபவர்.

## 24 மணி நேரமும் லுங்கியில் தான் இருப்பேன்: ஸ்ருதி ஹாசன்



Race Gurram' என்ற தெலுங்கு திரைபடத்தில் ஸ்ருதிஹாசன், அல்லு அர்ஜூனுக்கு ஜோடியாக நடித்திருந்தார். கடந்த ஏப்ரல் 11ஆம் தேதி ரிலீஸ் ஆன இந்த திரைப்படம் நல்ல வசூல் கொடுத்து வருவதாக டோலிவுட்டில் கூறப்படுகிறது.
இந்த படத்தில் அல்லு அர்ஜூன், ஸ்ருதிஹாசன், பிரகாஷ்ராஜ், ஷ்யாம், சலோனி மற்றும் ரவிகிஷன் ஆகியோர் நடித்திருந்தனர்.
சுரேந்தர் ரெட்டி இயக்கிய இந்த படத்திற்கு எஸ்.,தமன் இசையமைத்திருந்தார்.
இந்த படத்தில் இடம்பெறும் லுங்கி டான்ஸ் ஒன்று தற்போது ஆந்திரா முழுவதும் பிரபலமாகியுள்ளது.
ஸ்ருதிஹாசன் இந்த படத்தில் கவர்ச்சியின் எல்லையை தாண்டியிருந்தாலும், இவர் ஆடிய லுங்கி டான்சுக்கு ரசிகர்களிடையே பெரும் வரவேற்பு கிடைத்துள்ளது.
இதுகுறித்து ஸ்ருதி ஹாசன் ஒரு பேட்டியில், "நான் மட்டும் பையனாக பிறந்திருந்தால் 24 மணிநேரமும் லுங்கியில்தான் இருப்பேன். லுங்கி எனக்கு மிகவும் பிடித்த உடை. துரதிஷ்டவசமாக பெண்ணாக பிறந்தது விட்டேன். அதனால் என்னால் லுங்கி கட்ட முடிவதில்லை. ஆனால் என்னுடைய ஆசை 'Race Gurram' படத்தின் மூலம் நிறைவேறியது' என்று கூறியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமா

அடுத்தவன் பணத்தில் குளிர்காய்ந்து கலை வளர்க்க கடமை பட்டவர் இவர். பல தயாரிப்பாளர்களை படுக்க வைத்து விட்டு தான் பணம் போட்டு பண்ணிய படத்துக்கு பேராபத்து வந்து விட்டதே என்று இப்போ வானுக்கும் விண்ணுக்கும் குதிப்பவர்.

அதுதான் இப்போ விஸ்வரூபம் படம் கமலை தொற்றிக்கொண்ட பிரசினைகளின் விஸ்வரூபம் ஆகி இருக்கிறது. முதலில் DTH ஆல் தயாரிப்பாளர்கள் பிரச்சினை, அப்புறம் சினிமா விநியோகஸ்தர்கள், பின் திரையரங்க உரிமையாளர்கள், கேபிள் டிவி காரர்கள் என எல்லோரையும் தாக்கி இப்போ முஸ்லிம்கள் வரை ஏனையோரை புண்படுத்தி இருக்கிறது. தன லாபத்துக்காகவும், புது முயற்சி என்ற பெயரில் அடுத்தவரைப் பற்றி அக்கறை கொள்ளாத கமலை ஆட்டி வைத்திருக்கிறது. இது கமலுக்கு ஒரு படிப்பினை. யானைக்கும் அடி சறுக்கும் என்பார்கள்.. கமலுக்கு இப்போ சறுக்கி இருக்கிறது.

கமல் படம் வந்தாலே பிரச்சினை சேர்ந்து வருகிறது என சில நண்பர்கள் சொல்கிறார்கள்.. கமல் படம் வந்தால் பிரச்சினை வருவதில்லை, எதாவது பிரச்சினையை வேண்டுமென்றே இழுத்துப்போட்டுக்கொண்டு அதன்மூலன் ஒரு சீப் பப்ளிசிடியை தேடுவதே கமலின் நீண்ட கால வரலாறு. இலைமறைகாயாக எதாவது சமுதாயத்தை, மதத்தை, மனிதனை , மொழியை, இனத்தை சாடுவது, வசனம் பேசுவது, காட்சி வைப்பது போன்ற கீழ்த்தர மனநிலையை கமல் மாற்றிக்கொள்ள வேண்டும். அப்படியானால் மட்டுமே உலகநாயகனாக எல்லோர் மனத்திலும் அவர் உயர்ந்து நிற்க இயலும் .

கமல் நல்ல நடிகன் என்பதில் மாற்றுக்கருத்து யாருக்கும் இருக்க முடியாது, நல்ல மனநிலை உள்ளவராகவும் கமல் மாற வேண்டும் என்பதே எல்லோரது (அவா)வும்..

நன்றி: தினகரன்



## 5 நாட்களுக்கு ரூ.2 கோடி கேட்ட நயன்தாரா

இந்தியில் பெரும் வெற்றி பெற்ற ஓ மை காட் என்ற படம் இப்போது வெங்கடேஷ் மற்றும் பவன்கல்யாண் ஆகியோர் நடிக்க, தெலுங்கில் உருவாக்கப்படுகிறது. இந்தப் படத்தில் ஒரு சிறுவேடத்தில் நடிக்க நயன்தாராவை அனுகிய அதன் இயக்குனர் "ஐந்து நாட்கள் மட்டும் கால்ஷீட் கொடுத்தால் போதும்" என்று கூற அதற்கு நயன்தாரா கேட்ட சம்பளம் ரூ.2 கோடி. இந்திப் படத்தின் பெயரை தன்னை அறியாமல் ஒரு முறை சொல்லிக்கொண்ட இயக்குனர், ஐந்து நாள் மட்டும் நடித்தால் போதும் சம்பளத்தை. " என்று இழுக்க, " ஐந்து நாட்கள் நடிக்கும் வேடமாக இருந்தாலும் சரி ஐம்பது நாட்கள் நடிக்கும் வேடமாக இருந்தாலும் சரி, ஒரே சம்பளம்தான்" என்று திட்டவட்டமாகக் கூறி விட, தள்ளாடித் தடுமாறி வெளியேறிய தயாரிப்பாளரும், இயக்குனரும் அந்த வேடத்துக்கு இலியானாவை ஒப்பந்தித்துவிட்டனர். ஆகவே தயாரிப்பு மகாஜனங்களே ! நயன்தாரான்னா ரெண்டு கோடி, ரெண்டு கோடின்னா நயன்தாரா !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திவ்யா ஒரு கேள்விக்குறியா? 2

(குடும்பத் தொடர்...)

என்றால் நான் செத்திடுவேன் என்று கடைசிநேரத்தில் காதல் டயலாக் சொன்னவன் நித்தம் நித்தம் சாகடிக்கிறானே இது எதற்கான பழிவாங்கல்?

அசோக் யார்? எவன்? எப்படிப்பட்டவன் என்று எதுவுமே தெரியாமல் என்னவானாலும் பரவாயில்லை இந்த ஊரை விட்டு கண்காணாத தேசத்திற்குப் போக வேண்டுமென்று ஓடிப்போனவள் தானே அவள் ஆனால் ஓடிப்போன மறுநாளோ அவரை எனக்குப் பிடிக்கவில்லை அவரை நான் காதலிக்கவுமில்லை அவர் என்னைக் கடத்திக் கொண்டு வந்தவர் என்று ஊரிறியச் சொல்லி அழுதாலே அதன் பின்விளைவுகள்தானா இது? அந்த ஏமாற்றத்தின் பிரதிபலிப்புக்கள்தானா இது?

என்னவானால் என்ன அன்பைக் காட்டி அவளின் மனசில் இடம் பிடிக்க அவனால் முடியவில்லையே அன்பும் குதூகலமும் நிலவவேண்டிய அவர்கள் குடும்பத்தில் குடியும் வெறியும் அடியும் உதையும் தாண்டவமாடிற்று இன்பம் வரும்போது சிரிக்கவும் துன்பம் வரும்போது அழவுமே கற்றுக்கொண்டிருந்த அவளால் அவளின் பிரச்சினைக்குத் தீர்வுகாணத் தெரியவில்லை.

காலம் யாருக்காகவும் காத்திருக்கவில்லை. அது கடுகதி போல் பறந்து கொண்டிருந்தது. விதியின் கைகள் அவளின் வாழ்வைப் பார்த்துக் கைகொட்டிச்சிரித்தது. அவள் மட்டும் அழுதுகொண்டிருந்தாள். சிலவேளை ஆண்டவனும் அவளோடு சேர்ந்து அழுதிருப்பாரோ என்னவோ?

வாழ்க்கையில் நொந்து நூலாகிப்போன அவள் கோவில் குளம் கொண்டாட்டம், களியாட்டம் என்று எல்லாவற்றையும் தவிர்த்து வந்தாள். அன்று திண்ணைவேலி கம்பஸில் ஓர் ஊர்வலம் அவள் தனது மூன்றுவயது மகளையும் தூக்கிக்கொண்டு அந்த ஊர்வலத்தில் கலந்துகொண்டாள். சனக்கூட்டம் திரள் திரளாக சென்றுகொண்டிருந்தது. அப்போது ஓர்முகம், தெரிந்தமுகம் அதுயாருமே இல்லை. அவளை விட இரண்டு வகுப்பு கூடுதலாகப் படித்த யசோதா அக்காதான் சந்தேகமேயில்லை திவ்வியராணி தன்னை மறந்து ஓடிப்போய் "யசோக்கா" என்றாள். யசோக்கா திவ்யா நீயா என்று அவளைக் கட்டிப்பிடிக்கிறாள். திவ்வியராணியை வீட்டில் எல்லோருக்கும் செல்லமாக திவ்வியா என்றுதான் அழைப்பார்கள். அப்படியேதான் யசோக்காவும் அழைப்பாள்.

> "இன்னுமொரு நாள் மாணவர் மன்றத்தில் டினேஸ் நான் பாடும் மௌனராகம் கேட்கவில்லையா... என்ற பாடலை பாடும்போது திவ்வியா விம்மி விம்மி அழுதுகொண்டே...."

திவ்வியாவும் யசோக்காவும் சந்தோஷத்தில் மாறிமாறி முத்தமிடுகின்றார்கள். கைகளைப் பிடித்து சந்தோஷத்தைப் பகிர்ந்து கொள்கிறார்கள். திவ்வியாவை யசோக்காவிற்கு நிறை பிடிக்கும். அதேபோல திவ்வியாவிற்கும் யசோக்காவை நிறையப் பிடிக்கும். படிக்கிற காலத்தில் ஒரு நாளாவது இரண்டுபேரும் சந்திக்காமல் இருக்கமாட்டார்கள். யசோக்கா திவ்வியாவை சின்னப்பிள்ளையாகவே நினைத்து வந்தா. ஒருநாள் ஓ லெவல் படிக்கும்போது திவ்வியா அழுதுகொண்டிருந்தாள் உடனே யசோக்கா தன்னிடமிருந்து இரண்டு பலூன்களைக் கொடுத்து அழாதே என்று சொன்னதை நினைத்து திவ்வியா அடிக்கடி சிரித்துக்கொள்வாள், இன்னுமொரு நாள் மாணவர் மன்றத்தில் டினேஸ் நான் பாடும் மௌனராகம் கேட்கவில்லையா என்ற பாடலை பாடும்போது திவ்வியா விம்மி விம்மி அழுதாலோ அப்போதும் யசோக்கா அவளின் கையை பிடித்து அழாதேடி அழாதேடி என்று ஆறுதல்படுத்தினாள் இதனையும் திவ்வியா நினைத்துப் பார்க்கத்தவறுவதில்லை.

அப்படியான யசோக்காவைக் கண்டதும் அவளுக்குச் சந்தோஷம் தாளவில்லை "அக்கா நீங்கள் கதைக்கமாட்டீங்களோ என்று பயந்திட்டன் அக்கா" திவ்வியாவே பேச்சைத் தொடங்கினாள் " இல்லடி நீ எவ்வளவு கெட்டிக்காரி எவ்வளவு புத்திசாலி எவ்வளவு அறிவாளி ஏன் இப்படிப் போனாய் என்றுதான் யோசிக்கின்றேன். என்னமோ தெரியவில்லை அக்கா, சரி சரி இப்ப நீ எப்படி இருக்கிறாய் சந்தோஷமாய் இருக்கிறாய்தானே? யசோக்காவின் கேள்விக்கு திவ்வியா திணறிப்போனாள், எனினும் சுதாரித்துக்கொண்டு "ஓமக்கா நான் நல்லாயிருக்கிறன் அன்பான மாமா, அரவணைக்கிற மாமி பிறண்ட்சிப்பாக பழகிற மச்சான்மார், மச்சாள்மார், கண்கலங்காமல் பார்க்கிற கணவன், அழகான பிள்ளை போதுமான வருமானம்


தொடரும்...

பிரியநிலா
ஓமந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முயன்றால் முடியும்! 15



**இடமிருந்து வலம்**

1. சிறுவர் சிறுமியர் பாடப் புத்தகங்கள் இன்றி இரண்டு மாதங்கள் அமர்ந்திருந்த இடம் (7).
4. சட்டத்திற்குள் அடங்காதது (2, 4).
6. பண்டைய அரசர்கள் பலப்பரீட்சை செய்த இடம் (6).
8. இந்த மாதத்தின் நிலவிற்கு மட்டும் அத்தனை சிறப்பு கொண்டாட்டங்கள் சற்று அதிகம் (4).
9. சொம்பு இந்தப் பெயரில் பூ கூட உண்டு (3)
11. மெய் (3).
13. இந்த சொர்க்கம் சற்று குழப்பமானது (5).
14. காபி (4).
17. ராமாயணத்தில் ஒரு நல்ல ராட்சசி (4).
18. விரைவான கேள்வி–பதில் (3, 2).
20. தெனாலியில் பிறந்த விகடகவிக்கு மதிப்பு (4, 3).
22. விண்மீன்கள் பளிச்சிடும் நேரம் (5).
23. மேலே உள்ள கட்டங்கள் ஒரு..... (3).

**மேலிருந்து கீழ்**

1. இதிலுள்ள வட்டங்கள் சினேகாவிற்கு ஒரு ரூபாய் நாணயம் போல் தெரிந்ததாம் (6).
2. சில்லென்று குண்டுமல்லி கிடைக்கும் இடம் (4).
3. நிறுவனங்களுக்கும், அரசாங்கங்களுக்கும், சில சமயத்தில் தனியொருவருக்கும் கூட இது இருப்பதுண்டு. அனுமன் சீதைக்குக் காட்டிய மோதிரம் கூட இவ்வகையைச் சார்ந்ததுதான்(5).
4. கூறு, புகர் (4).
5. தங்கத்தின் தரமறிய இது தேவை (4)
7. அய்யன் திருவள்ளுவர் நிற்கும் இடம் (7).
10. நடிகைகள் தங்கள் கவர்ச்சியில் இது இல்லை என்று சத்தியம் செய்வார்கள் (4).
12. உண்ணும் உணவு உடலினுள் இந்த மாற்றத்துக்கு உட்படுகிறது (5).
13. மீனாவும் பத்மினியும் நடனமாடிய ராகம் (4).
15. இவர்களைப் பார்க்காத ஆண்கள் பேராண்மை கொண்டவர்கள் (5).
16. (மழை) (4).
19. கேள், விசாரி (3).
21. புதுக்கவிதைகள் இவ்விலக்கணத்திற்குக் கட்டுப்படாதவை (3).

விடைகளை மேலுள்ள கூப்பனில் எழுதி, கத்தரித்து எங்களுக்கு அனுப்பிவையுங்கள். முற்றிலும் சரியான விடைகளை எழுதுபவர்களில், குலுக்கல் மூலம் தெரிவாகும் முதல் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 500/-, 300/-, 200/- வழங்கப்படும்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1கா | ற் | று | | 2நா | க | ம் | |
| 3த | வ | ளை | | 4கே | ள் | லி | |
| ல் | வி | 5த | | ஸ் | | | 6கு |
| | | | 7த | | 8வே | ட் | டை |
| | | 9ப | ந் | தி | 10த் | 11பு | 12தி |
| 13அ | ரு | ந் | தி | த | | ன் | ல |
| 14ம | த | ம் | 15ர | | 16ம் | ன | க |
| | 17ம | த | ம் | ரு | | கை | ம் |

சென்ற மாதத்திற்கான சரியான பதிலை எழுதியவர்களில் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்ட 3 அதிஷ்டசாலிகள் பணப்பரிசை பெறுகின்றார்கள்

**500/-** ர.துர்க்கா ஷாலினி–அளவெட்டி கிழக்கு, கணேஸ்வரம்.

**300/-** மேரிஷர்மிளா – 48,இளநிலா குடியிருப்பு, முழங்காவில்.

**200/-** சி.உமாசிவம் – இல:90, கற்குழி, வவுனியா.

### முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி பாராட்டுப்பெறும் அதிர்ஷ்டசாலிகள்


ர.நிறோஜினி – அன்பின் சகோதரிகள் இல்லம், செட்டிகுளம், வவுனியா.

பு.கிரிசாந் – அளவெட்டி கிழக்கு, அளவெட்டி, கணேஸ்வரம்

செ.கஜந்திகா – சாஸ்திரிகூளாங்குளம், வவுனியா.

செ.கௌசல்யன் – இல:49, நூல்நிலைய வீதி, கூமாங்குளம், வவுனியா.

பு.பிரகாஷ் – அளவெட்டி கிழக்கு,கணேஸ்வரம்.



வேறு ஒன்னுமில்ல மாம்...! அவனுக்கு டூர் முக்கியம்.
வைக்கு பிரென்ச், ஹிந்தி கிளாஸ் முக்கியம்.
அதான் டியூசன் மிஸ்ஸையும் கூடவே கூட்டிக்கிட்டோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் உயிர்ப் பாடல்

படம் : கரகாட்டக்காரன் (1989)
இசை : இளையராஜா
பாடலாசிரியர்: கங்கைஅமரன்
பாடியவர் : இளையராஜா, சித்ரா

## இந்துமான் உந்தன் சொந்துமான்...

இந்த மான் உந்தன் சொந்த மான்
பக்கம் வந்து தான் சிந்து பாடும்
இந்த மான் உந்தன் சொந்த மான்
பக்கம் வந்து தான் சிந்து பாடும்
சிந்தைக்குள் ஆடும் ஜீவனே கண்மணியே
சந்திக்க வேண்டும் தேவியே என் உயிரே
(இந்தமான்...)

வேல் விழி போடும் தூண்டிலிலே
நான் விழலானேன் தோளிலே
நூல் இடை தேயும் நோயிலே
நான் வரம் கேட்கும் கோயிலே
அன்னமே அ ஆ ஆ ஆ ஆ
அன்னமே எந்தன் ஸ்வர்ணமே
உந்தன் எண்ணமே வானவில் வண்ணமே
கண்ணமே மதுக் கிண்ணமே
அதில் பொன் மணி வைரங்கள் மின்னுமே
எண்ணமே தொல்லை பண்ணுமே
பெண் என்னும் கங்கைக்குள் பேரின்பமே
இந்த மான் உந்தன் சொந்த மான்
பக்கம் வந்து தான் சிந்து பாடும்
சிந்தைக்குள் ஆடும் ஜீவனே கண்மணியே
சந்திக்க வேண்டும் தேவனே என் உயிரே
(இந்தமான்...)

பொன் மணி மேகலை ஆடுதே
உன் விழி தான் இடம் தேடுதே
பெண் உடல் பார்த்ததும் நாணுதே
இன்பத்தில் வேதனை ஆனதே
எண்ணத்தால் ஆ ஆ ஆ ஆ
எண்ணத்தால் உன்னை எண்ணித்தான்
உடல் மின்னத்தான் வேதனை பின்னத்தான்
சொல்லித்தான் நெஞ்சை கிள்ளித்தான்
என்னை சொர்கத்தில் தேவனும் சோதித்தான்
மோகம் தான் சிந்தும் வேகம் தான்
தாகத்தில் நான் நிற்க அனந்தம் தான்
இந்த மான் உந்தன் சொந்த மான்
பக்கம் வந்து தான் சிந்து பாடும்
இந்த மான் உந்தன் சொந்த மான்
பக்கம் வந்து தான் சிந்து பாடும்
சிந்தைக்குள் ஆடும் ஜீவனே கண்மணியே
சந்திக்க வேண்டும் தேவியே என் உயிரே

மறக்கமுடியாத இளையராஜாவின் பாடல்களில் இந்தப்பாடலும் ஒன்று. அருமையான குரலினிமை. இனிமையான இசை எனக்கு ரொம்ப பிடிக்கும்.

கவிந்
இராசேந்திரங்குளம், வவுனியா.

# உங்கள் ராசிக்கு காதல் உறவுகள் எவ்வகையில் அமையும்



## துலாம்

எப்போதும் அடாவடியாக பேசிக் கொண்டிருக்கும் துலாம் ராசிக்காரர்கள், யாரும் எதிர்கொள்ளாத புதிய அனுபவங்களையும், நிகழ்ச்சிகளையும் எதிர்கொள்வர். இவர்களுக்கு மற்றவர்களை எளிதில் கவரும் ஆற்றல் உள்ளதால் காதல் இவர்களுக்கு கை வந்த கலை. ஆனால் இவர்கள் காதல் திருமணம் செய்து கொள்வது உகந்தது அல்ல. காதல் திருமணம் பெரும்பாலும் தோல்வி'யிலேயே முடியும் வாய்ப்பு உள்ளது. துலாம் ராசிக்காரர்களுக்கு காதல் உணர்வு அதிகமாக இருக்கும். பெண்ணாக இருந்தால் சிறந்த காதலியாக இருப்பார். ஆனால் அவரிடம் சிறந்த குணமிருக்காது. விருட்சிக ராசிக்காரருடன் துலாம் ராசிக்காரர் காதல் கொண்டால் மிகச் சிறப்பாக இருக்கும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Face Book ல்
## சிங்கத்திடம் சிக்கியது மான்.

மீண்டும்..........

நிஷாந் – கவி என்ன போய்விட்டீர்களா? அப்படி என்ன வேலை? பொய் எல்லாம் சொல்ல வேண்டாம். ஐந்து நிமிடம் என்னோடு கதையுங்கோ தயவு செய்து.

கவி – அறிமுகம் இல்லை. யாரென்று தெரியாது, நீங்களும் சொல்கின்றீர்கள் இல்லை, எப்படி உங்களோடு கதைக்கின்றது. சும்மா விளையாடாதேங்க. அதற்கு வேறு யாரையும் பாருங்கோ.

நிஷாந் – ஐயோ, மன்னியுங்கோ கவி. நான் நிஷாந். நான் எதிர்ப்பார்த்திருந்தேன் உனக்கும் முகஅட்டை இருக்கும் சந்திப்போம் என்று.

**சில ஆண்கள் சீண்டியும் பார்க்க சிந்திக்கிறார்கள். சிந்திப்பது மட்டுமா? சின்னாபின்னமாக்குகிறார்கள்.**

கவி – ம் நீங்களா? அதுசரி ஏன் யாரென்று சொல்லாமல் கதைச்சு பேச்சு வாங்குறீங்கள்.

நிஷாந் – நீ தானே பேசினாய். சும்மாதான் அப்படி செய்தனான்.

கவி – அது இருக்கட்டும், நீங்கள் என்ன செய்கின்றீர்கள்?

நிஷாந் – நான் தகவல் தொழிநுட்பம் படிக்கின்றேன் கல்வியற் கல்லூரியில். நீ என்ன செய்கின்றாய்?

கவி – ம். ம் நல்லாப் படி. நான் கணனி வகுப்பிற்கு போகின்றேன். அம்மம்மா வீட்ட தான் நிற்கின்றேன். (என்று கவி சொன்னாள்.)

அதற்கு

நிஷாந் – Ok எதுக்காக அங்கு போய் நிக்கின்றாய்? ஏதும் பிரச்சனையா?

கவி – அப்படியெல்லாம் இல்லை நிஷாந். அம்மம்மாவை பார்க்க வந்தனான். அங்கேயே நின்று படிக்கின்றேன்.

சரி நிஷாந் நான் பிறகு கதைக்கின்றேன்.

Bye

(நிஷாந் தொடர்ந்து கதைத்துக் கொண்டிருப்பான் என்று தெரிந்து முகஅட்டையிடம் (Face Book) விடைப்பெற்றாள்.

பின்னர் கவி இரண்டு நாட்கள் கழித்துதான் மீண்டும் முகஅட்டைக்கு (Face Book) வந்தாள். அன்றும் அவளுக்காக காத்திருந்தவன் போல்..

நிஷாந் – கவி என்னடி செய்கின்றாய்?


கவி – இரண்டு நாள் முகஅட்டை பார்க்க முடியவில்லை அதனால் சிறிது நேரம் பார்க்க என்று தான் வந்தனான்.

கவி – நீங்க எப்படி சுகம்? சாப்பிட்டீங்களா?

நிஷாந் – ம். சாப்பிட்டன். நல்ல சுகம். நீ எப்படி சுகம்? சாப்பிட்டியா?

கவி – ம். சாப்பிட்டன். நல்ல சுகம்.

இப்படி இருவரும் இரண்டு நாட்களுக்கு ஒருமுறை உரையாடிக் கொள்வார்கள். ஒரு நாள் நிஷாந் கவியிடம் கொஞ்சம் வித்தியாசமாக நடந்து கொண்டான்.



நிஷாந் – என்ன கவி செய்கிறாய்? யாரையும் காதலிக்கிறியா?

(தொடரும்...)

**செல்வநாயகம் கஜந்தினி**
சாஸ்திரிகூழாங்குளம், வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் அரங்கம்



தயாணி பரமலிங்கம்
மாணவர் இல: 01


சலோமி
மாணவர் இல: 02


சியியா
மாணவர் இல: 03


பே.பானுயன்
மாணவர் இல: 04


ற.அபிதா
மாணவர் இல: 05


ற.அனோஜினி
மாணவர் இல: 06


கீ.கலையரசி
மாணவர் இல: 07


க.கயலரசி
மாணவர் இல: 08


ஜீ.சான்சியா
மாணவர் இல: 09


ந.டேனுஜன்
மாணவர் இல: 10


உ.கனிமாறன்
மாணவர் இல: 11



உ.கனிநிலவன்
மாணவர் இல: 12


மா.கயலக்ஸி
மாணவர் இல: 13


ந.சாலினி
மாணவர் இல: 14


சி.டனுஸ்கரன்
மாணவர் இல: 15


ர.நிரோஜினி
மாணவர் இல: 16


ச.பிரதீபன்
மாணவர் இல: 17


வீ.சஜானா
மாணவர் இல: 18


ஞா.துஷ்யந்தன்
மாணவர் இல: 19



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிதைந்த கனவுகள்

– சிறுகதை

■ கூடலூர் ச.அ.இராசநாயகம்

'பாய்ச்சல் பாலன்' பெயருக்கேற்ற பெரும் சீட்டுக்களையும் பிடித்தான். மேலும் சில மாதங்கள் கழிந்தன. அன்று திங்கட்கிழமை. பாலனின் பல்பொருள் வாணிபக் கடையில் வியாபாரம் களைகட்டி இருந்தது.பெண்கள் கூட்டமே அதிகமாக இருந்தது. அப்போதுதான் அங்கே 'பெரும்புயல்' ஒன்று ஊடறுத்து உட்புகுந்தது. 'பேரழகு' எனச்சொல்வார்களே அதையும் மிஞ்சும் அளவுக்கு 'அவள்' அழகியாக இருந்தாள். இப்போதைய சினிமா பாணியில் சொல்லப்போனால் 'எத்தனை பேரை சாய்த்தாளோ இன்னும் எவரை சாய்க்கப்போகின்றாளோ?' என எண்ணத்தோன்றும். கண்களை சிமிட்டினாள். கைகளை குழைந்தாள். வாய் முழுவதும் ரோஜாவாகச் சிரித்தாள். அவளது சிவந்த உதடுகள் இப்போது கிளிபோன்று பேசின. "மன்னிக்க வேணும். நான் ஒரு பயணம் போகவேணும். ரெண்டு பொருள்தான் வாங்கப்போறன் தாறீங்களா?" அந்த அழகிதான் கேட்டாள். அங்கு நின்ற எல்லோருமே திடுதிப்பென திரும்பிப் பார்த்து வியந்து நின்ற அந்த அற்புதத்தை இவ்வளவு நேரத்துக்குள்ளும் கண்டு கொள்ளாதிருக்க பாலன் என்ன துறவியா? அதிர்ச்சியில் இருந்து கஷ்டப்பட்டு மீண்ட பாலன் குழைந்து பேசினான். "முன்னுக்கு வாங்கோ. என்ன வேணும்" கடையில் இருவர் உதவிக்கு இருந்தாலும் பாலனே எழுந்து அவள் கேட்ட சாமான்களை நிறுத்துக் கொடுத்தான். பெற்றுக்கொண்ட அந்தப்புயல் செல்லமாய் "தாங்க்ஸ்" சொல்லிய படியே ஒய்யார நடை போட்டுச் சென்று மறைந்தது. கேள்விக்குறியோடு காணப்பட்ட அங்கு நின்றோருக்கும் பாலனுக்கும் அங்கு நின்ற ஒருத்தி சொன்னாள். "இந்தப் பிள்ளைதான் எங்கட ஒழுங்கையில் இப்ப புதுசா வாடகைக்கு வீடு எடுத்து இருக்குது. ஒரு பிள்ளையாம். அதுவும் சின்னன். புருசன் வெளிநாட்டிலையாம்" சனங்களும் கலைய பாலனும் தனது வேலையை கவனித்தான். அதன்பின்பு தினமும் அவள் அந்தக்கடைக்கு வருவாள். அவளது பெயர் மீனா. நாள்கள் செல்ல தனக்கு பணம் வருவது மூன்று மாதத்துக்கு ஒருமுறை என பாலனிடம் சொல்லி "கடன்கொப்பி"யும் போட்டு இருந்தாள்.பாலனும் கடன் கொடுத்தான்.

ஒரு வருடத்துக்குள் எல்லாம் தலைகீழாக நடந்து முடிந்து இருந்தது. "வசந்தம்" வீசிக்கொண்டிருந்த அன்பரசியின் குடும்பத்துக்குள் பெரும் பிரளயம் வெடித்தது. மீனா, பாலன் ஆகியோரின் இரகசியத்தொடர்பு அம்பலமாகிக் கொண்டிருந்தது. இது அன்பரசியின் காதுக்கும் எட்டியிருந்தது. இதனால் குடும்பத்துக்குள் அடிக்கடி சண்டை நடந்தது. பாலன் முன்பு போல் அல்லாமல் முற்றாக மாறி இருந்தான். அன்பரசி மீது அடிக்கடி எரிந்து விழுந்தான். வீடு, குடும்பம் என்ற எண்ணமே இல்லாது போனான். எனினும் பூரணமான தெளிவு ஒன்று தெரியும்வரை அன்பரசி பொறுத்தாள். ஆனாலும் அவள் புயலாக போவதை பாலன் அதுவரை அறிந்திருக்கவில்லை. இதற்கிடையே சீட்டுக்காரனும் நட்டத்துடன் முறிந்தது. கடையில் கடனுக்கு சாமான்கள் வாங்கிய பலர் பணம் கொடுக்காமல் நழுவினர். மீனாவும் அவனிடம் பெரும் பணம் வாரிச் சுருட்டினாள். பெரும் கடனாளி ஆகி ஒரு நாள் பாலன் மீனா இருவரும் அந்த ஊரைவிட்டே ஓடித் தலைமறைவாகினர்.

பாலன், மீனா தலைமறைவானது அவர்களது கள்ளத்தொடர்பு உறுதிப்படவே அந்த மென்மையான அன்புப் பூ புயலாய் மாறியது. "இனிமேல் பாலன் எனக்கு கணவன் இல்லை. எத்தனை வருசமானாலும் அவனுக்கு மன்னிப்பே கிடையாது. இரு பிள்ளைகளையும் வளர்த்து ஆளாக்குவேன்" என அவர்கள் தலைமறைவாகிய அன்றே சபதம் எடுத்து அவனது உடைகளையும் எரித்து தன் நெற்றிக் குங்குமத்தை அழித்தாள் அன்பரசி. அவனது பிறேம் போட்ட படங்களை உடைத்தாள். மோட்டார் சைக்கிளையும் எரிக்க முயன்றாள். அயலவர் தடுத்தனர். கூந்தலை அவிழ்த்து தலைவிரி கோலமானாள்.

அன்பரசி வீடுகள், கடைகள் எனக் கூலி வேலை செய்து பிள்ளைகள் இருவரையும் படிப்பித்து இருவருக்கும் திருமணமும் செய்து வைத்துவிட்டாள். இப்போ வயது நாற்பத்தைந்து கடக்கும் அன்பரசி

**"இனிமேல் பாலன் எனக்கு கணவன் இல்லை. எத்தனை வருசமானாலும் அவனுக்கு மன்னிப்பே கிடையாது. இரு பிள்ளைகளையும் வளர்த்து ஆளாக்குவேன்"**

(தொடரும்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடகு வைத்த நகைள் மாயம்: வங்கிக்கு பொதுமக்கள் சீல் வைப்பு இந்தியா சேலம் மாவட்டத்தில் சம்பவம்

சேலம் அருகே கூட்டுறவு வங்கியில் அடகு வைத்த நகைகளில் முறைகேடு நடந்ததையடுத்து பொதுமக்கள் வங்கிக்கு பூட்டு போட்டு சீல் வைத்தனர்.சேலம் மாவட்டம் முருங்கப்பட்டி அருகேயுள்ள கரிசப்பட்டியில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி செயல்பட்டு வருகிறது. இதில் கடந்த 5 ஆண்டுகளாக செயலாளராக பணியாற்றி வரும் சுகவனேஸ்வரன் மீது ஏற்கனவே பல்வேறு குற்றச்சாட்டுகள் கூறப்பட்டு வந்துள்ளது. இவர் அடகு வைக்கப்படும் நகைகளை மீட்டு மீண்டும் அதிக பணத்திற்கு அடகு வைத்து பணத்தை கையாடல் செய்துள்ளதாக பல்வேறு குற்றச்சாட்டுகள் எழுந்தது.



இந்நிலையில் கடந்த வெள்ளிக்கிழமையன்று ஊர்த்திருவிழா நடந்த சமயத்தில் தற்போதைய செயலாளர் மாணிக்கத்திடம் வங்கி சாவியை வாங்கி கம்ப்யூட்டர் சரி செய்வதாக கூறி வங்கியில் இருந்துள்ளார். பின்னர் நேற்று நகையை மீட்க வந்த அருள்குமார் என்பவரது நகையை பாதுகாப்பு பெட்டகத்தில் சென்று பார்த்தபோது நகைகள் காணாமல் போனது தெரிய வந்தது. இதையடுத்து சோதனை நடத்தியதில் மொத்தம் நான்கு பேரின் பெயரில் வைக்கப்பட்ட 67 சவரன் நகைகள் காணாமல் போனது தெரியவந்தது. இது குறித்து வங்கியின் தலைவர் காவல் நிலையத்தில் புகார் கூறியதை அடுத்து சுகவனேஸ்வரனை காவல் துறையினர் கைது செய்து பின்னர் உடனடியாக விடுவித்தனர். இதையடுத்து நடவடிக்கை எடுக்கப்படும் என நம்பியிருந்த மக்கள் 21 ம்தேதி மீண்டும் அவர் பணிக்கு வந்ததால் ஆத்திரமடைந்தனர். இதையடுத்து வங்கி முன்பு கூடிய 500க்கும் அதிகமானோர் வங்கி முன்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதோடு ஊழியர்களை வங்கியிலிருந்து வெளியேற்றிவிட்டு பூட்டுபோட்டனர். இதையடுத்து அங்குவந்த காவல்துறை கூடுதல் கண்காணிப்பாளர் சரோஜ் குமார் தாகூர் மக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி அமைதிபடுத்தினார். பின்னர் சுகவனேஸ்வரனை காவல்துறையினர் வாகனத்தில் ஏற்றி சென்றனர். இதையடுத்து கலைந்து சென்ற பொதுமக்கள், அவரை காவல் துறையினர் தப்பவிடாமல் தண்டனை வாங்கித்தருவதோடு பொதுமக்களின் நகைகளையும் மீட்டு தருமாறு கோரிக்கை வைத்தனர்.

**Job Bank**

வேலைவாய்ப்பு தருணர்களாக இருந்தாலும் சரி வேலைவாய்ப்பை பெறுபவர்களாக இருந்தாலும் சரி எங்களுடன் இணைந்து உங்கள் தேவைகளை நிவர்த்தி செய்வது தான் இந்த JOB BANK இன் சேவை.

### வேலைவாய்ப்பு

■ வவுனியா சந்தை சுற்றுவட்ட வீதியில் அமைந்த டேவிட் மொபைல் நெற் நிலையத்திற்கு பெண் வேலையாட்கள் தேவை.
தொடர்புகளுக்கு:

**பதவி வெற்றிடம் (வவுனியாவில்)**

பிரபல தொழில்சார் கல்லூரிக்கு கணனி அறிவு மற்றும் ஆங்கில அறிவுடன் கூடிய
**நிர்வாக உத்தியோகத்தர் (பெண்)**
தேவை
சம்பளம் நேரில் பேசித் தீர்மாணிக்கப்படும்
077 9713221

**வியாபார நிறுவன உரிமையாளர்களே! உங்களுடைய தொழிலுக்குத் பொருத்தமான பணியாளர்களை எதிர்பார்த்துக்கொண்டு இருக்கின்றீர்களா?**

**மாணவ மாணவியர்களே! படித்துவிட்டு உங்களுக்கு விருப்பமான வேலை ஒன்றை கற்றுக்கொள்வதற்கு எதிர்பார்த்துள்ளீர்களா?**

**உடன் தொடர்பு கொண்டு எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்**

**எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது!**

அழையுங்கள் **077 900 94 91**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1



1ம் இடத்தைப் பெற்ற போட்டியாளர் புஸ்பராசா நிதர்சன் அவர்களுக்கு (217, சுந்தரபுரம், வவுனியா) தம்றோ நிறுவனத்தின் வடமாகண விற்பனை முகாமையாளர் திரு.M.K.சிறிகரன் அவர்கள் பரிசை வழங்கி கௌரவிக்கின்றார்

2



2ம் இடத்தைப் பெற்ற போட்டியாளர் சுவேந்திரன் சாமினி அவர்களுக்கு (472, கரியாலை நாகபடுவான்) தம்றோ நிறுவனத்தின் வடமாகண விற்பனை முகாமையாளர் திரு.M.K.சிறிகரன் அவர்கள் பரிசை வழங்கி கௌரவிக்கின்றார்

3



3ம் இடத்தைப் பெற்ற போட்டியாளர் ம.லீ.சதீஸ்வரன் அவர்களுக்கு (23, பாடாசாலை வீதி, பண்டாரிகுளம்) கிரி எலெக்ரோனிக் சுப்பர் மார்க்கட் உரிமையாளரும் வவுனியா மாவட்ட தொழில்அதிபரில் ஒருவருமான திரு.இ.கிரிதரன் அவர்கள் பரிசை வழங்கி கௌரவிக்கின்றார்

**குறித்த நேரத்தில் சமூகமளிக்காது பரிசுகளைப் பெற்ற போட்டியாளர்கள்:**

ர.நிரோஜினி – அன்புச் சகோதரிகள் இல்லம், செட்டிகுளம், வவுனியா

சு.தவராசா – இல: 29, புதிய சந்தை, வவுனியா.

துர்க்கா ஷாலினி – கணேஸ்வரம், அளவெட்டி கிழக்கு.

செ.உதயதர்சினி – 9 வட்டாரம், மல்லிகைத்தீவு, புதுக்குடியிருப்பு.

செ.புஸ்பராசா – கணேஸ்வரம், அளவெட்டி.

வி.யோகராசா – கிளவிகுளம், பாலமோட்டை.


## 10 ஆறுதல் பரிசுகளைப் பெற்றுக்கொள்பவர்கள்




ஆறுதல் பரிசை பெற்றுக்கொண்ட போட்டியாளர் ஜெயானந்தம் அவர்களுக்கு (44, கந்தசாமி கோவில் வீதி, வவுனியா) தம்றோ நிறுவனத்தின் வடமாகண விற்பனை பிரதிநிதி திரு.S.மனோஜ் அவர்கள் பரிசை வழங்கி கௌரவிக்கின்றார்



ஆறுதல் பரிசை பெற்றுக்கொண்ட போட்டியாளர் J.சிவகௌரி அவர்களுக்கு (இல:36, தொண்டமான்நகர், கிளிநொச்சி) தம்றோ நிறுவனத்தின் வடமாகண விற்பனை பிரதிநிதி திரு.S.மனோஜ் அவர்கள் பரிசை வழங்கி கௌரவிக்கின்றார்



ஆறுதல் பரிசை பெற்றுக்கொண்ட போட்டியாளர் S.ராஜசேகர் அவர்களுக்கு (77, பஸ்நிலையம், வவுனியா.) தம்றோ நிறுவனத்தின் வடமாகண விற்பனை பிரதிநிதி திரு.S.மனோஜ் அவர்கள் பரிசை வழங்கி கௌரவிக்கின்றார்




ஆறுதல் பரிசை பெற்றுக்கொண்ட போட்டியாளர் திகழ்மதி அவர்களுக்கு (M.P.C.S.குட்செட்வீதி, வவுனியா.) தம்றோ நிறுவனத்தின் வடமாகண விற்பனை முகாமையாளர் திரு.M.K.சிறிகரன் அவர்கள் பரிசை வழங்கி கௌரவிக்கின்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞாபகசக்தியை கூட்டவேண்டுமா? நடவுங்கள்

நடப்பதால் மூளையின் ஞாபகசக்திக்கு பொறுப்பாகவுள்ள பகுதி தூண்டப்பட்டு ஞாபகசக்தி பெருக வாய்ப்புண்டு என்று புதிய ஆராய்ச்சி மூலம் அறியப்பட்டுள்ளது.

வயது செல்லச்செல்ல நரம்புக்கலங்கள் படிப்படியாக இறக்கின்றன, இதுவே வயதானவர்களில் ஞாபகசக்தி குன்றுவதற்கான காரணங்களில் ஒன்றாகக் காணப்படுகிறது. முதிர்ச்சியடைந்த ஒருவரின் மூளையின் நரம்புகள் மேலும் வளர்ச்சி அடைவதில்லை என்றே இற்றைவரைக்கும் ஆய்வாளர்களால் நம்பப்பட்டு வந்தது, ஆனால் சி.டி ஸ்கான் போன்ற படரீதியான படிப்புகளால் அது பிழை என அறியப்பட்டது. இரண்டு இடங்களில் நரம்பு வளர்ச்சி மிக்க செயற்பாடானதாக இருப்பதை அறிவியலாளர்கள் அறிந்துள்ளனர்: ஒன்று மணநுகர்ச்சிப் பகுதி மற்றையது ஞாபகசக்திக்குப் பொறுப்பான கிப்போகம்பசின் ஒருபகுதி.



ஆராய்ச்சியில், எந்தவித செயற்பாடும் இல்லாத வீட்டிலேயே உட்கார்ந்து இருக்கும் 120 முதியோர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். இவர்களில் அரைவாசிப்பேர் எழுந்தமானமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒருநாளிற்கு 40 நிமிடப்படி வாரத்தில் மூன்று நாட்களுக்கு நடக்கவிடப்பட்டனர், இது ஒரு வருடம் நடைபெற்றது. ஏனையோர் அதே கால வேளையில் சிறிதான நீட்டல் உடற்பயிற்சிகளைச் செய்தனர். ஒருவருட காலத்தின் பின்னர் நடந்தவர்களின் கிப்போகம்பசில் 2மூ வளர்ச்சி தென்பட்டது, மற்றைய பகுதியினரிடம் பெரும்பாலும் 1மூ வளர்ச்சி குன்றிக் காணப்பட்டது.

நடை போன்ற உடற்பயிற்சிகள் எலும்புகளுக்கு அல்லது தசைகளுக்கு குருதியோட்டத்தை அதிகரிப்பது மட்டுமில்லாது புதிய நரம்புக்கலங்கள் வளர்வதையும் தூண்டுகிறது என்பதற்கு இந்த ஆய்வு சிறந்ததொரு சான்றாக உள்ளது.


எப்படி உடற்பயிற்சிமூலம் இது நிகழ்கின்றது என்பது இன்னமும் தெரியாவிடினும் குருதியோட்டம் அதிகரிப்பதால் நரம்புக்கலங்களுக்குரிய போசாக்கு தாராளமாகக் கிடைப்பது ஒரு காரணியாக இருக்கலாம் என நம்பப்படுகிறது. உடற்பயிற்சி மேலும் சில வளருக்கிகளையும் (ஹோர்மோன்) மூளை வேதியவினை பொருட்களையும் அதிகரிக்கின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது, இதனால் புதிதாக உருவாகிய நரம்புக்கலங்களுக்கு சிறந்தொரு ஊடகம் கிடைக்கின்றது.

"உடற்பயிற்சி சிறந்ததொரு மருந்து" என இவ்வாராய்ச்சியில் ஈடுபட்ட கிராமர் என்பவர் தெரிவித்தார். வாகனங்கள் இல்லாத அக்காலத்தில் மனிதர்கள் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய ஒரு இடத்தை விட்டு இன்னொரு இடத்திற்கு நடந்தே சென்றனர் சிறப்புடன் வாழ்ந்தனர்.

"தம்பி உந்தத் திறப்பு எங்கேயோ வைச்சு விட்டன்..வர வர மறதியாக இருக்கு..." என்று சொல்லும் ஒருவரைப்பார்த்து இப்போது நீங்கள் கூறலாம் "ஒவ்வொரு நாளும் கொஞ்சம் நடந்து செல்லுங்கோ..

**விடைகள்:**

1) குன்றிமணி
2) கப்பல்
3) டாக்டர் போடும் ஊசி
4) நாக்கு
5) விளக்குமாறு
6) வானத்தில் நிலவு, நட்சத்திரங்கள்
7) நா
8) வானம், பூமி, மேகம்
9) பலாப்பழம்
10) காற்று






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவருக்கும் ஆங்கிலம் 09

சாதாரண செயல்வினை வாக்கியங்களில், எழுவாய் (Subject) எப்பொழுதும் வாக்கியத்தின் ஆரம்பத்திலேயே வரும். ஆனால் செயப்பாட்டுவினை வாக்கிய்ங்களில் அவ்வாறு அல்லாமல் செயப்படுபொருளே (Object) வாக்கியத்தின் ஆரம்பத்தில் தோன்றும். அதேவேளை வாக்கியத்தின் பிரதான வினைசொல் Past Participle சொற்களாகவே இருக்கும்.

எடுத்துக்காட்டாக:
Sarmilan is doing a job.
சர்மிலன் செய்துக்கொண்டிருக்கின்றான் ஒரு வேலை.
(The) Job is done by Sarmilan.
வேலையை செய்யப்படுகிறது சர்மிலனால்.
(சர்மிலனால் வேலை செய்யப்படுகிறது.)

சரி! இந்த செயப்பாட்டுவினை வாக்கியங்களை எளிதாக கற்பதற்கு அவற்றையும் ஒரு கிரமர் பெட்டன் (Grammar Patterns) ஆக வடிவமைத்து பயிற்சி செய்வோம்.
உச்சரிப்பு பயிற்சி பெறவிரும்புவோர் ஒலி கோப்பினை சொடுக்கி பயிற்சி பெறலாம்.
செயப்பாட்டுவினை கற்கவேண்டியதன் முக்கியத்துவம்

1. ஆங்கில பத்திரிகைகளை இலகுவாக வாசித்து விளங்கிகொள்வதற்கு.
2. ஆங்கில அரச பதிவேடுகளை, கடிதங்களை எளிதாக வாசித்து விளங்கிகொள்வதற்கு.
3. வானொலி, தொலைக்காட்சி செய்திகளை புரிந்துக்கொள்வதற்கு.
4. ஆங்கில மொழியில் (உயர்கல்வி) பாடங்களை இலகுவாக விளங்கிக்கற்பதற்கு (கணிதம், கணினி, தொழில்நுட்பம் போன்றவை...)
5. ஆங்கில செயப்பாட்டுவினை வாக்கியங்களூடாக யாரும் உங்களுடன் உரையாடினால், அவற்றை எளிதாக விளங்கிக்கொள்வதற்கும் மறுமொழிவதற்கும்.

செய்திகளில் செயப்பாட்டுவினை (Passive Voice) வாக்கியங்கள்

Hong Kong Island was occupied by British forces in 1841
ஹொங்கொங் தீவை கைப்பற்றப்பட்டது பிரித்தானியப் படைகளால் 1841 இல்.
(ஹொங்கொங் தீவை பிரித்தானியப் படைகளால் 1841 இல் கைப்பற்றப்பட்டது.)

A young female Tamil journalist was arrested by the Police on suspicion.
ஒரு இளம் தமிழ் பெண் பத்திரிக்கையாளரை கைதுசெய்யப்பட்டது பொலிஸாரால் சந்தேகத்தில்.
(ஒரு இளம் தமிழ் பெண் பத்திரிக்கையாளரை சந்தேகத்தின் பேரில் கைதுச்செய்யப்பட்டுள்ளது.)

Two decomposed bodies of Tamils were discovered on Friday.
இரண்டு சிதைவுற்ற தமிழர்களின் உடலங்களை கண்டுபிடிக்கப்பட்டது வெள்ளிக்கிழமை.

Tamils were abducted by unidentified armed persons.
தமிழர்களை கடத்திச்செல்லப்பட்டது அடையாளம் காணப்படாத ஆயுததாரிகளால்.
(அடையாளம் காணப்படாத ஆயுததாரிகளால் தமிழர்களை கடத்திச்செல்லப்பட்டுள்ளது.)

An university Tamil girl was kidnapped on December 31 morning.
ஒரு பல்கலைக் கழக தமிழ் பெண்ணை கடத்தப்பட்டது டிசம்பர் 31 காலையில்.
(பல்கலைக்கழக தமிழ் பெண் ஒருவரை டிசம்பர் 31 ம் நாள் காலையில் கடத்தப்பட்டுள்ளது.)

Navanethem Pillay was appointed as new United Nations High Commissioner for Human Rights.
நவநீதம் பிள்ளையை நியமிக்கப்பட்டது புதிய ஐக்கிய நாடுகளின் மனிதவுரிமை உயர் ஆணையராக.
(நவநீதம் பிள்ளை அவர்களை புதிய ஐக்கிய நாடுகளின் மனிதவுரிமை உயர் ஆணையராக நியமிக்கப்பட்டுள்ளது.)

Barack Hussein Obama was elected President of the United States on 5 Nov 2008.
பாரக் /ஹசேன் ஒபாமாவை தேர்ந்தெடுக்கப்பட்டது ஐக்கிய அமெரிக்காவின் சனாதிபதியாக 5 நவம்பர் 2008 இல்.
(2008 நவம்பர் 5 ஆம் நாளன்று ஐக்கிய அமெரிக்காவின் சனாதிபதியாக பாரக் /ஹசேன் ஒபாமா அவர்களை தேர்ந்தெடுக்கப்பட்டது.)

Annathurai is considered an intellectual and a brilliant Tamil scholar.
அண்ணாதுறையை கருதப்படுகின்றது ஒரு புத்திமானாகவும் ஒரு பிரகாசமான தமிழ் கல்விமானாகவும்.
(அண்ணாத்துறை அவர்களை ஒரு பிரகாசமான தமிழ் கல்விமானாகவும் புத்திமானாகவும் கருத்தப்படுகின்றது.)

அடுத்த மாதம் சந்திப்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணினி மயம் 5

-தேடுதலுக்கான விடை

நம் கம்ப்யூட்டரில் உள்ள ஹார்ட் டிஸ்க்கில் தான் அனைத்து டேட்டாக்களும் பதிவு செய்யப்படுகின்றன. இங்குதான் கம்ப்யூட்டரின் ஆப்பரேட்டிங் சிஸ்டம் அமர்ந்து கொண்டு கம்ப்யூட்டரை இயக்குகிறது. ஏறத்தாழ 50 ஆண்டுகளாகத்தான் ஹார்ட் டிஸ்க் கம்ப்யூட்டரின் ஓர் இன்றியமையாத உறுப்பாக இயங்கி வருகிறது. கம்ப்யூட்டர் பயன்பாடு வந்த தொடக்கத்தில் ஹார்ட் டிஸ்க் என்பதே இல்லை. இப்போது 2 டெராபைட் கொள்ளளவு கொண்ட ஹார்ட் டிஸ்க்குகள் வந்துள்ளன. ஆனால் பத்து ஆண்டுகளுக்கு முன்பு வரை 1 ஜிபிக்கும் குறைவான அளவுள்ள ஹார்ட் டிஸ்க்குகளே புழக்கத்தில் இருந்தன.



ஹார்ட் டிஸ்க்கின் விலை வேகமாகச் சரிந்து, தற்போது யாவரும் வாங்கும் வகையில் மலிவாக உள்ளது. ஆனால் அதே நேரத்தில் ஒரு ஹார்ட் டிஸ்க் பதிந்து கொள்ளும் டேட்டா அளவு தொடர்ந்து உயர்ந்து வருகிறது. இந்த ஹார்ட் டிஸ்க் வந்த பாதையினை தொடக்கம் முதல் இங்கு காணலாம்.

1956 – ஐ.பி.எம். நிறுவனம் தன்னுடைய RAMAC 305 என்ற சிஸ்டத்தில் மிகப் பெரிய அளவிலான கொள்ளளவுடன் கூடிய ஹார்ட் டிஸ்க்கினை இணைத்து அறிமுகப்படுத்தியது. இந்த மிகப் பெரிய கொள்ளளவு எவ்வளவு தெரியுமா? 5 எம்.பி. அப்போது அது உண்மையிலேயே மிகப் பெரிய அளவிலான திறன் தான். ஒரு எம்பி டேட்டா கொள்ளளவிற்கு 10 ஆயிரம் டாலர் விலை எனக் குறிக்கப்பட்டது. இதன் திட அளவு இரண்டு ரெப்ரிஜிரேட்டர் அளவிற்கு இருந்தது. இதில் 24 அங்குல அளவுள்ள 50 பிளாட்டர்கள் இருந்தன.

1961 – ஐ.பி.எம். ஹார்ட் டிஸ்க்கிற்கான டிரைவ் ஹெட் காற்றில் இருக்கும் வகையில் அமைத்தது.

1961 – பைரண்ட் கம்ப்யூட்டர் 90 எம்பி திறனுடன் ஹார்ட் டிஸ்க்கைக் கொண்டு வந்தது. 39 அங்குல அகலத்தில் 24 டிஸ்க்குகள் கொண்டதாக இது அமைந்திருந்தது.

1963 – முதல் முதலாக கம்ப்யூட்டர் சிஸ்டத்திலிருந்து வெளியே எடுக்கக் கூடிய ரிமூவபிள் ஹார்ட் டிஸ்க்கினை ஐ.பி.எம். உருவாக்கியது. இதன் திறன் 2.69 எம்.பி. 14 அங்குல அளவில் 6 பிளாட்டர்கள் இருந்தன.

1966 – புதுவிதமான ரெகார்டிங் ஹெட் கொண்ட ஹார்ட் டிஸ்க்கினை ஐ.பி.எம். உருவாக்கியது. திறன் 29.17 எம்.பி.

1971 – ட்ரேக் சர்வோ சிஸ்டம் கொண்ட முதல் ஹார்ட் டிஸ்க்கினை ஐ.பி.எம். கொண்டு வந்தது. இது 100 எம்பி திறன் கொண்டிருந்தது.

1973 – நவீன வின்ச்செஸ்டர் ஹார்ட் டிரைவினை ஐ.பி.எம். கொண்டு வந்தது. 14 அங்குல பிளாட்டர்கள் 11 இருந்தன. திறன் 100 எம்பி.

1975 – ஐ.பி.எம். 62 ரோட்டரி ஆக்சுவேட்டருடன் வந்த முதல் ஹார்ட் டிஸ்க். 5 அல்லது 9 எம்பி திறனுடன் அமைந்தது.

1976 – 43 எப்.டி. கிறிஸ்டல் என்னும், முதல் வளைந்து கொடுக்கக் கூடிய டிஸ்க் டிரைவ் இரு பக்கமும் எழுதக் கூடியது. 8 அங்குல அகலத்துடன் 0.568 எம்பி கொள்ளளவு கொண்டது.

கார்ட் அசோசியேட்ஸ் என்னும் நிறுவனம் முதல் 5.25 அங்குல அகலத்தில் ப்ளெக்ஸிபிள் டிஸ்க்கினைக் கொண்டு வந்தது. இதில் 0.2188 எம்பி டேட்டா பதியலாம்.

1979 – பியஜிட்ஸ் நிறுவனம் 10.5 அங்குல அகலத்தில் ஹார்ட் டிஸ்க் டிரைவினைத் தந்தது. ஆறு பிளாட்டர்கள் உள்ளன.

ஸீகேட் டெக்னாலஜிஸ் நிறுவனம் எஸ்.டி. 506 என்ற 5.25 அங்குல ஹார்ட் டிஸ்க்கினை 5 எம்.பி திறனுடன் கொண்டு வந்தது. இதில் 4 பிளாட்டர்கள் இருந்தன.

1980 – முதல் கிகாபைட் அளவிலான ஹார்ட் டிஸ்க். ஐ.பி.எம். கொண்டு வந்த இந்த ஹார்ட் டிஸ்க் ஒரு ரெப்ரிஜிரேட்டர் அளவு இருந்தது. 250 கிலோ எடையுடன் 40 ஆயிரம் டாலர் மதிப்பு கொண்டிருந்தது.

1981 – சோனி நிறுவனமும் டிஸ்க் தயாரிப்பு பணியில் இறங்கியது. 3.5 அங்குல ப்ளெக்ஸிபில் டிஸ்க்கினைக் கொண்டு வந்தது.கொள்ளளவு திறன் 0.4375 எம்பி.

1983 – ரோடிம் முதல் 3.5 அங்குல ஹார்ட் டிஸ்க்கினைத் தயாரித்து வழங்கியது.இதில் இரண்டு பிளாட்டர்கள் இருந்தன. அளவு 10 எம்பி.




1986 – அதிக திறனுடன் இயங்கும் ஸ்கஸ்ஸி ஹார்ட் டிஸ்க் டிரைவுடன் ஆப்பிள் நிறுவனத்தின் மேக் கம்ப்யூட்டர் வெளியானது.

1988 – கானர் நிறுவனம் ஒரு அங்குல உயரத்திலான 3.5 அங்குல ஹார்ட் டிரைவினைத் தயாரித்து வழங்கியது. இன்று வரை இதுதான் லேப்டாப் கம்ப்யூட்டர்களில் பயன்படுத்தப்படுகிறது. முதலில் இது 31 எம்பி திறன் கொண்டதாக அமைந்தது.

1992 – ஸீ கேட் நிறுவனம் அதிர்வுகளைத் தாங்கக் கூடிய


(மிகுதி அடுத்த இதழில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைப்பர் கண்டுபிடித்த பெண்மணி

கார் என்ற வாகனத்தில் செல்லாதவர்களை விரல்விட்டு எண்ணக்கூடிய காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். காரில் செல்லும்போது திடீரென மழை வந்துவிட்டால் முன் உள்ள கண்ணாடியில் பட்ட மழைத்துளிகளை அங்கும் இங்கும் அசைந்து துடைக்கும் வின்ட்ஷீல்டு வைப்பரைப் (றுைனௌாநைடன றுினிசை) பார்த்திருப்போம்.



வின்ட்ஷீல்டு வைப்பரைக் கண்டுபிடித்தவர் மேரி ஆண்டர்சன் (Mary Anderson)என்ற பெண் ஆவார். 1866ஆம் ஆண்டு அமெரிக்காவின் அலபாமா மாநிலத்தில் பிறந்த மேரி சிறு வயதிலேயே தாய் மற்றும் சகோதரிகளுடன் பிர்மிங்ஹாம் என்ற நகரத்திற்குச் சென்றுள்ளார். கட்டுமானத் துறையின்மீது இருந்த ஆர்வத்தால் கட்டுமானப் பொறியாளர் ஆனார்.

தனது நண்பரைச் சந்திக்க நியூயார்க் சென்றபோது அங்கிருந்த டிராலி வண்டியில் பயணம் செய்தார். அப்போது பனிப்பொழிவு அதிகம் இருக்கவே முன்பக்கக் கண்ணாடியைத் திறந்து வைத்தபடியே கார் ஓட்டி வந்துள்ளார் ஓட்டுநர். இது குறித்து ஓட்டுநரிடம் கேட்டபோது, கண்ணாடியில் பனி பொழியும்போது அதனைச் சுத்தம் செய்வது கடினம் என்று ஓட்டுநர் கூறியுள்ளார்.

அலபாமா நகரத்திற்கு வந்தபிறகும், பனியைத் துடைக்கும் கருவி வடிவமைக்க வேண்டும் என்ற எண்ணமே அவரது மனதில் மேலோங்கி நின்றது. நீளமான கட்டையை எடுத்து, அதன் அடிப்பகுதியில் கடினமான ரப்பர் ஒன்றை இணைத்து, அந்தக் கட்டையினைக் கையினால் இயங்கும் முறையில் அமைத்தார்.

கார் அல்லது டிராலி ஓட்டுநர்கள் தங்களின் கையினால் அசைக்கக்கூடிய வகையில் வாகனத்திற்குள் பொருத்தினார். பின்னர், தமது நண்பர்களின் கார்களில் பொருத்திப் பார்த்து அது நன்கு வேலை செய்வதைப் பார்த்து மகிழ்ந்தார். கண்ணாடித் துடைப்பானுக்குக் காப்புரிமை கோரினார். 17 ஆண்டுகளுக்குக் காப்புரிமை கிடைத்தது.

கனடா நாட்டைச் சேர்ந்த தனியார் நிறுவனத்திடம் தனது கண்டுபிடிப்பைக் காட்டியபோது நிராகரிக்கப் பட்டது. காரணம் கேட்டபோது, கண்ணாடித் துடைப்பானுக்கு வியாபாரரீதியாக எந்தப் பலனும் இல்லை என்று நிறுவனம் பதில் கொடுத்தது.

1920ஆம் ஆண்டு காப்புரிமை முடிவடைந்த நிலையில் கார்களின் விற்பனை அதிகமாகத் தொடங்கியது. 1922ஆம் ஆண்டு காடிலாக் கார் உற்பத்தி நிறுவனம் கண்ணாடித் துடைப்பானை காரின் முக்கியமான அங்கமாக நினைத்தது. பின்னர், அனைத்து உற்பத்தியாளர்களாலும் வடிவமைக்கப்பட்டது.

இன்று எத்தனையோ விதவிதமான துடைப்பான்கள் வந்துள்ளபோதிலும் இதற்கெல்லாம் மேரி ஆண்டெர்சன் முயற்சியும் வெற்றியுமே அடிப்படையாகும்.

**எப்போதும் அச்சத்தில் இருப்பதைவிட ஆபத்தை ஒருமுறை சந்திப்பதே மேல்..!**



-டெஸ்கார்ட்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதை மழை

கவிதைக்கு களம் அமைத்து தரும்
கவிதை மழையில் உங்கள் கவிதையும்
நனைந்திடலாம் வழமையான
உங்கள் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்



## பொய்யாய்ப் புன்னகைத்தாய்

கவிதை எழுதிட எண்ணி
கடதாசி தனை எடுத்தேன்
கை எழுத மறுக்கின்றது
எழுதிமுடிப்பதென்று எண்ணித்துணிந்து
எழுதுகோல் தனை எடுத்தேன்
மை எழுத மறுக்கிறது
ஏன்! ஏன்! ஏன்!
உண்மைகளை மறைத்து
பொய்களைப் பரப்பிடும்
புல்லர்களின் புனைகதைகளால்

கவிஞர் - துரை
ஓமந்தை

## கோழைகள்

ஜாதியும் மதமும்
பணமும்தான்
நம்காதலுக்கு
தடையென்றால்
அவற்றை
தகர்த்தெறிந்திட
தைரியமில்லாத
கோழைதான் நீ
உன்னைப் போன்ற
நில கோழைகளினால்தான்
என்னைப்போன்ற சில
பெண்ணின் வாழ்வு
கேள்விக்குறியாகிறது

பிரியநிலா
ஓமந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் சங்கதி

## மீண்டும் உலக கோப்பையை வென்று சாதனை வரிசையில் இணைவோம்: டோனி நம்பிக்கை

11வது உலக கோப்பை கிரிக்கெட் போட்டி அடுத்த ஆண்டு (2015) பிப்ரவரி 14ந்தேதி முதல் மார்ச் 29ந்தேதி வரை ஆஸ்திரேலியா, நியூசிலாந்து நாடுகளில் நடைபெறுகிறது. உலக கோப்பை திருவிழாவுக்கு தொடங்க சரியாக 9 மாதங்கள் இருப்பதை யொட்டி இந்திய கேப்டன் டோனி, ஐ.சி.சி. இணையதளத்துக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது

உலக கோப்பையை தக்க வைத்துக் கொள்வதற்கான போட்டியில் களம் இறங்க இன்னும் 9 மாதங்கள் மட்டுமே இருக்கிறது என்பதை நினைக்கும் போது சிலிர்ப்பாக உள்ளது. மும்பையில் அந்த அதிசயத்தக்க இரவு வந்து (உலக கோப்பையை வென்ற நாள்) ஏறக்குறைய மூன்று ஆண்டுகள் ஓடோடி விட்டது.

அந்த இரவு மட்டுமின்றி, அந்த ஒட்டுமொத்த தொடரும் என்றுமே எங்களது வாழ்க்கையில் மறக்க முடியாதது. உலக கோப்பை வரலாற்றில், வெஸ்ட் இண்டீஸ் மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய அணிகள் மட்டுமே உலக கோப்பையை அடுத்தடுத்து ருசித்த அணிகள் என்பதை நாங்கள் அறிவோம்.

அந்த சாதனைப்பட்டியலில் 3வது அணியாக எங்களால் இடம் பிடிக்க முடியும். அதற்குரிய தகுதி எங்களிடம் இருப்பதாக நம்புகிறேன். உச்சக்கட்ட நெருக்கடிக்கு மத்தியில் விளையாடும் போது அதை திறம்பட சமாளிக்கக்கூடிய அனுபவம் வாய்ந்த வீரர்கள் எங்களிடம் இருக்கிறார்கள்.



2011ம் ஆண்டு உலக கோப்பை, 2013ம் ஆண்டு இங்கிலாந்தில் நடந்த ஐ.சி.சி. சாம்பியன்ஸ் கோப்பை ஆகிய போட்டிகளில் இதை நாங்கள் நிருபித்து காட்டியுள்ளோம். நியூசிலாந்தில் நடந்த ஒரு நாள் தொடரில் நாங்கள் ஒரு ஆட்டத்தில் கூட வெல்லவில்லை.


ஆனால் இந்த தொடர் உலக கோப்பைக்கு தயாராவதற்கு பயனுள்ள அனுபவத்தை கொடுத்துள்ளது. 2011ம் ஆண்டு உலக கோப்பையை வென்ற போது ஒட்டுமொத்த தேசமும் மகிழ்ச்சிக்குள்ளானது. 2015ம் ஆண்டிலும் அதை மீண்டும் செய்ய விரும்புகிறோம்.

இவ்வாறு டோனி கூறியுள்ளார்.

## ஐபிஎல் ஓனர்களிலேயே பரமஏழை பிரித்தி தானாம்

ஐபிஎல் அணி உரிமையாளர்களியே ஏழ்மையானவர் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி உரிமையாளரான நடிகை ப்ரீத்தி ஜிந்தாதான் ஏழையானவராம். வெல்த் எக்ஸ் என்ற இதழ் இதைத் தெரிவித்துள்ளது. கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் முக்கியப் பங்குதாரர் ப்ரீத்திதான். ஆனால் எட்டு ஐபிஎல் உரிமையாளர்களின் சொத்துப் பத்துக்களைப் பார்க்கும்போது கொஞ்சமாக வைத்திருப்பவர் ப்ரீத்தி மட்டுமே.

ப்ரீத்தி ஜிந்தாவின் சொத்து மதிப்பு 30 மில்லியன் டாலர்தான். அதாவது ரூ. 183 கோடியாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# සිංහල උගනිමු சிங்களம் கற்போம் 10

அன்பார்ந்த வாசகர்களே!

දයාබර පාඨකයිනි,

උපකාරක පද
இடைச்சொற்கள்

මෙම කලාපයෙන් ද "යි" උපකාරක පදය භාවිත කරන්නේ කොහොම ද කියලා බලමු
இவ் இதழ் மூலமும் "ය" என்ற இடைச் சொல்லை பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் எவை என கற்போம்

ඉලක්කම් යොදාගෙන කතා බහ කරන කොට "යි" යොදාගන් නවා
இலக்கங்கள் சிலவற்றைப் பயன்படுத்தும் போது "ය" சேர்க்கப்பட்டு பிரயோகிக்கப்படும்

උදාහරණ
එකය් දෙකයි තුනයි කියලා ගනිමු
உதாரணம்
ஒன்று, இரண்டு, மூன்று என எண்ணுவோம்

පාටවර්ග කිහිපයක් යොදාගෙන කතා කරනකොට යි යොදා ගන්නවා
நிறங்கள் சிலவற்றை ஒன்றாக கூறும் சந்தர்ப்பத்தில் ா சேர்க்கப்பட்டு பிரயோகிக்கப்படும்

උදාහරණ
රතුපාටයි නිල්පාටයි කහපාටයි එපා
உதாரணம்
சிகப்பு, நீலம், மஞ்சள் நிறங்கள் வேண்டாம்
සුදුපාටයි රෝසපාටයි කළුපාටයි ඕන
வெள்ளை, ரோஸ், கறுப்பு நிறங்கள் வேண்டும்

උපකරණ ගැන කතාකරන කොටත් "යි" යොදාගන්නවා
பல உபகரணங்களின் பெயர்களை ஒன்றாக பயன்படுத்தும் போது "ය" ஐ பிரயோகிப்போம்

උදාහරණ
මේ මේසයයි පුටුවයි අලුත්
உதாரணம்
இந்த மேசையும் கதிரையும் புதியது
පෑනයි පැන්සලයි කෝ
பேனையும் பென்சிலும் எங்கே இருக்கின்றது

පලතුරු එකක් දෙකක් තුනක් ගැන එකවිට කියනකොට "යි" එකතු කර ගන්නවා
ஒன்றுக்கு மேற்பட்ட பழ வகைகளைப் பற்றி ஒரே நேரத்தில் கூறும் போது "ය" பிரயோகிக்கப்படும்

උදාහරණ
අඹයි පේරයි අන්නාසියි ගේන්න
உதாரணம்
மாம்பழமும் கொய்யாப்பழமும் அன்னாசிப்பழமும் கொண்டு வாருங்கள்
මිදියි අනෝදයි තියෙනවා
முந்திரிகையும், சீத்தாப்பழமும் உள்ளது.

එළවළු ගැන කියන කොටත් "යි" යොදාගෙන කියනවා
ஒன்றுக்கு மேற்பட்ட மரக்கறி வகைகளை கூறும் போது "යි" பிரயோகிக்கப்படும்

උදාහරණ
තක්කාලියි අලයි උයමු
உதாரணம்
தக்காளியும் கிழங்கும் சமைப்போம்
බටුයි කරවිලයි දෙන්න
கத்தரிக்காயும், பாகற்காயும் தாருங்கள்

ඊළඟ කලාපයෙන් තව ටිකක් ඉගෙන ගනිමු
அடுத்த மாத இதழ் மூலம் இன்னும் சில இடைச்சொற்களை கற்போம்

**பி.வி.செல்வராஜ்**
விரிவுரையாளர் (ஓய்வுபெற்ற) தேசிய கல்வியியற் கல்லூரி
පී.වී.සෙල්වරාජ්
කථිකාචාර්ය (විශ්‍රාමික)

## சிறிய கிரகமான புதன் மேலும் சுருங்குகிறது அதிர்ச்சியில் நாசா

சூரியனைச் சுற்றி வரும் 9 கோள்களில் முதல் கோளாகவும், மிகச் சிறிய கோளாகவும் விளங்கும் புதன் கிரகம், கடந்த 4 கோடி ஆண்டுகளில் 8.6 மைல் அளவுக்கு அதன் விட்டம் சுருங்கி உள்ளதாக நாசாவின் ஆராய்ச்சிகளில் தெரிய வந்துள்ளது.

பாறைகளால் ஆன புதன் கிரகத்தில் பகல் மூன்று மாதமும், இரவு மூன்று மாதமும் இருக்கும். புதன் கிரகத்தில் பகலில் வெயில் 400 டிகிரி செல்சியசில் இருக்கும். இரவாக உள்ள பகுதியில் குளிர் ஆளைக் கொன்று விடும். மைனஸ் 173 டிகிரியாக இருக்கும். புதன் கிரகத்தில் செடி, கொடி, மரம என எதுவும் இல்லை. எந்த உயிரினமும் வாழும் சூழ்நிலையும் இல்லை.

அமெரிக்கவின் நாஸா விண்வெளி ஆராய்ச்சி மையம் கடந்த 2004 ஆம் ஆண்டில் அனுப்பிய மெசஞ்சர் விண்கலம் 2008 ஆம் ஆண்டுகளில் புதன் கிரகத்தை அடைந்து அப்போதிலிருந்து அக்கிரகத்தை ஆராய்ந்து அரிய தகவல்களை அனுப்பி வருகிறது. மெசஞ்சர் அனுப்பிய புகைப்படங்களை ஆராய்ந்த ஆய்வாளர்கள் புதன் கிரகம் கடந்த 4 கோடி ஆண்டுகளில் 8.6 மைல் அளவுக்கு அதன் விட்டம் சுருங்கி உள்ளதாக தெரிவித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் மாணவர்களுக்கான வினாத்தொகுப்பு

மாணவர்களை பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம்-5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சையின் வினாத்தாள் 1 இற்கான மாதிரி வினாக்கள்


**ஆசிரியர்: என்.எஸ்.தீபன்** B.A, PG Dip in Edu, Dip in Teach
வ/பூந்தோட்டம் ம.வித்தியாலயம்



21. ரூபா 50.00 ஐக் கொடுத்து ரு.12.00 பெறுமதியான பேனாவை வாங்கிய ஐஸ்மில்லுக்கு கடைக்காரன் மீதியாக வழங்கிய நாணயங்களைக் கொணட சரியான விதம்.
    1. 5 ரூபா 2, 2 ரூபா 6, 1 ரூபா 3, 50 சதம் 4
    2. 5 ரூபா 3, 2 ரூபா 3, 1 ரூபா 3,. 50 சதம் 6
    3. 5 ரூா 2, 2 ரூபா 3, 1 ரூபா 8, 50 சதம் 8

* **A, B, இருவரும் ஒரு இடத்தில் இருந்து 50m வடக்கு நோக்கிச் சென்று பின் A கிழக்கு நோக்கி 50m உம், B தெற்கு நோக்கி 100m உம் சென்றனர்.**

22. A ஆரம்ப இடத்தில் இருந்து எத்திசையில் உள்ளான்?
    1. கிழக்கு 2. வடகிழக்கு 3. தென்மேற்கு
23. B ஆரம்ப இடத்தில் இருந்து எவ்வளவு தூரத்தில் உள்ளார்?
    1. 150 2. 180m 3. 50m





24. A யில் உள்ள ஒருவர் Bயை அடைவதற்கு எத்தனை முறை வலது பக்கம் திரும்பி உள்ளார்?
    1. 4 2. 5 3. 6
25. Bயில் உள்ளவர் A யை அடைவதற்கு எத்தனை முறை வலது பக்கம் திரும்பி உள்ளார்?
    1. 4 2. 5 3. 6
26. 15m தூர இடைவெளியில் தூண்கள் நடப்பட்டிருந்தன எனின் 60m இடைவெளியில் நடப்பட்டிருக்கும் தூண்கள் எத்தனை?
    1. 4 2. 5 3. 6
27. கூடை ஒன்றில் 4 சிவப்பு பந்துகளும் 2 நீலப்பந்துகளும் இருந்தன. அதில் ஒன்றை எழுமாற்றாக எடுக்கும் போது அப்பந்து கட்டாயம் சிவப்பு நிறமாக வரும் தடவை யாது?
    1. 3 2. 4 3. 5
28. தொலைபேசி நிறுவனம் ஒன்று மீள் நிரப்பும் தொகைக்கு சலுகைக் கட்டணமாக பின்வருமாறு அறவிட்டது. முதல் 300 ரூபா மீள்நிரப்புக்கு 100 ரூபாவும் அடுத்த 100 ரூபா மீள்நிரப்புக்கு 150 ரூபாவும் அடுத்த 100 ரூபா மீள் நிரப்புக்கு 200 ரூபாவும் இதன் பின்னரான மேலதிக தொகைக்கு ஒவ்வொரு ரூபா மீள் நிரப்புக்கும் 3 ரூபா வீதமும் சலுகை வழங்கியது எனின் 600 ரூபாவை செலுத்திய ஒருவருக்கு சலுகைக் கட்டணமாக மேலதிகமாக எவ்வளவு தொகை கிடைக்கும்?
    1. 450.00 2. 750.00 3. 453.00
29. X இன் பெறுமதியைக் காண்க.

| | |
|---|---|
| 4 | 3 |
| | 2 |
| | 14 |

| | |
|---|---|
| 6 | 2 |
| | 3 |
| | 15 |

| | |
|---|---|
| 7 | X |
| | 4 |
| | 11 |

X ............................

30. 

இவ்வுருவில் இருந்து ஆக்கக்கூடிய செவ்வகங்கள் எத்தனை?
    1. 5
    2. 9
    3. 11

* **31ஆம் 32ஆம் வினாக்களுக்கு அடுத்த கூட்டத்தைத் தெரிவு செய்க.**

31. பகுதி → திகதி → திராட்சை
    1. திருப்பம் 2. ........ 3. ராட்டினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32. AFCE → FEAC → ECFA

1. CAEF 2. CAFE 3. FECA

* 33ஆம் 34ஆம் வினாக்களுக்கு வசனத்தின் முடிக்கும் சொல்லை பொருத்தமாக தெரிவு செய்க.

33. மரத்தில் இருந்து தேங்காய்கள் ..............................................

1. விழுந்தது 2. விழுந்தனர் 3. விழுந்தன

34. மாணவர்கள் கடற்கரைகளில் மணல் வீடு கட்டி ..............................................


1. விளையாடுவோம் 2. விளையாடினார்கள் 3. உடைத்தது

35. நாளை தை மாதம் 28ஆம் திகதி. மாசி மாதம் 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை எனின் இன்று என்ன நாளாகும்?

1. வெள்ளி 2. சனி 3. ஞாயிறு

36. பின்வரும் உருக்களில் அதிகளவு செங்கோணங்களைக் கொண்ட உரு எது?

1. T 2. F 3. E

37. 


A யின் பெறுமதி யாது?

..............................................

38. 10.30க்கு பஸ் நிலையத்தை அடைய வேண்டிய பேருந்து 1 மணி 30 நிமிடங்கள் பிந்தி வந்தடைந்தது எனின் பஸ் நிலையத்தை வந்தடைந்த நேரம் யாது?

1. 12.00 2. 11.45 3. 9.00


* தரப்பட்டுள்ள குறியீடுகளை அவதானித்து 39ஆம் 40ஆம் வினாக்களுக்கு வீடை தருக.



39. இக் குறியீடுகளில் அதிக தடவைகள் வந்துள்ள குறியீடு எது?

1. * 2.  3. 


40. சம அளவில் இடம்பெற்றுள்ள குறியீடு அல்லாதது எது?

1.  2.  3. *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வர்ணம் தீட்டி பரிசுகளை வெல்லுங்கள்



குறிப்பு; 5ம் ஆண்டுக்கு உட்பட்ட மாணவர்களின் ஆக்கங்கள் மட்டுமே போட்டியில் சேர்த்துக்கொள்ளப்படும்

உங்கள் ஆக்கங்களை 25.05.2014 க்கு முன் கிடைக்குமாறு எமது வழமையான முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

தெரிவு செய்யப்படும் 3 வர்ணத்திற்கு பாடசாலை உபகரணப் பொருட்கள் பரிசாக வழங்கப்படும்

பெயர் : ..........................................

முகவரி : ..........................................

தரம் : ..........................................

தொ.பே.இல : ..........................................

பாடசாலை : ..........................................

வ.ஆசிரியர் ஒப்பம் : ..........................................


வர்ணம் தீட்டி பரிசுகளை வெல்லுங்கள் போட்டிக்கு பிரதான அனுசரணையாளர்

கையடக்கத் தொலைபேசிகளின் ராஜன்

இல:34, சந்தை சுற்றுவட்ட வீதி, வவுனியா.
077 6362555, 077 0565384
077 7577080

Ke.Pe.L
Video Vision & Mobile


கிரி எலெக்ரோனிக் சுப்பர் மார்க்கட் வழங்கும் பரிசுக்குவியலுக்கான கூப்பன்

பெயர் : ..........................................

முகவரி : ..........................................

அ.அ.இல : ..........................................

தொ.பே.இல : ..........................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இம்மாத இராசிபலன்

**மேஷம்:** மனதில் இனம் புரியாத பயம் வந்து போகும். உங்கள் மீது சிலர் வீண் பழி சுமத்த முயற்சிப்பார்கள். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும். உத்யோகத்தில் சக ஊழியர்களால் அலைக் கழிக்கப்படுவீர்கள். முன்கோபத்தை தவிர்க்க வேண்டிய மாதம்.

**ரிஷபம்:** திட்டமிட்ட காரியங்கள் தாமதமாக முடியும். பிள்ளைகளால் டென்ஷன் அதிகரிக்கும். பழைய பிரச்னைகள் தலைத்தூக்கும். வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாவதில் தாமதம் ஏற்படும். உத்யோகத்தில் வேலைச்சுமையால் சோர்வடைவீர்கள்.

**மிதுனம்:** நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும். உடன்பிறந்தவர்கள் உங்கள் ஆலோசனையை ஏற்பார்கள். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். பழைய கடன் பிரச்னை கட்டுக்குள்வரும். புதுத் தொழில் தொடங்குவீர்கள். உத்யோகத்தில் உங்களை நம்பி மூத்த அதிகாரி சில பொறுப்புகளை ஒப்படைப்பார். இனிமையான மாதம்.

**கடகம்:** உணர்ச்சிப்பூர்வமாகப் பேசுவதை விட்டு அறிவு பூர்வமாகப் பேசுவீர்கள், செயல்படுவீர்கள். திடீர் முடிவுகள் எடுப்பீர்கள். பிள்ளைகளை புதிய பாதையில் வழி நடத்துவீர்கள். வி.ஐ.பிகள் உதவுவார்கள். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். அலுவலகத்தில் மரியாதைக் கூடும். சாதிக்கும் மாதம்.

**சிம்மம்:** எதிலும் அவசரப்பட வேண்டாம். குடும்பத்தில் அமைதி திரும்பும். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். உறவினர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் புது முதலீடு செய்வீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். மகிழ்ச்சியான மாதம்.

**கன்னி:** அவசர முடிவுகள் எடுக்காமல் இருப்பது நல்லது. கோபத்தால் பகை உண்டாகும். யாரையும் யாருக்கும் பரிந்துரை செய்யாதீர்கள். வியாபாரத்தில் புதியவர்களை நம்பி ஏமாற வேண்டாம். உத்யோகத்தில் கூடுதலாக வேலைப் பார்க்க வேண்டி வரும். விட்டுக் கொடுத்து போக வேண்டிய மாதம்.

**துலாம்:** சவாலான விஷயங்களையும் சாதாரணமாக முடிப்பீர்கள். பிள்ளைகள் உங்கள் பேச்சிற்கு மதிப்பளிப்பார்கள். கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக முடியும். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். உத்தியோகத்தில் தலைமையின் ஆதரவுக் கிடைக்கும். திறமைகள் வெளிப்படும் மாதம்.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர், நண்பர்களின் வருகையால் வீட்டில் உற்சாகம் பொங்கும். வழக்கில் வெற்றி பெறுவீர்கள். வியாபாரத்தில் அனுபவமிக்க வேலையாட்களை தேடுவீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும்படி நடந்துக் கொள்வீர்கள். தொட்டது துலங்கும் மாதம்.

**தனுசு:** மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்கக் கூடாது என்று முடிவெடுப்பீர்கள். உறவினர்களில் உண்மை யானவர்களை கண்டறிவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தை விரிவுப்படுத்துவீர்கள். உத்யோகத்தில் சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். கனவு நனவாகும் மாதம்.

**மகரம்:** திட்டமிட்ட காரியங்கள் கைகூடும். பழைய நண்பர்கள் உதவுவார்கள். பணப்பற்றாக்குறையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். தாயாருக்கு மருத்துவச் செலவுகள் வரக்கூடும். வியாபாரத்தில் சூட்சுமங்களை உணர்வீர்கள். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும்.

**கும்பம்:** துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் பக்கபலமாக இருப்பார்கள். அரசால் ஆதாயம் உண்டு. வீடு, மனை வாங்குவது, விற்பது லாபகரமாக அமையும். வியாபாரத்தில் சில மாற்றங்கள் செய்வீர்கள். உத்யோகத்தில் தலைமைக்கு நெருக்கமாவீர்கள்.

**மீனம்:** வீண் டென்ஷன் வந்து போகும். கணவன்-மனைவிக்குள் இருந்த மோதல்கள் விலகும். பணப் புழக்கம் கணிசமாக உயரும். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். வியாபாரத் தில் எதிர்பார்த்த லாபம் வரும். உத்தியோகத்தில் இழந்த உரிமையை பெறுவீர்கள்.

"வேதாகம கிரியா ஜோதி" **சிவஸ்ரீ இரவீந்திர உமா சுதக்குருக்கள்**
ஸ்ரீ லக்ஷ்மி சமேத நரசிங்கர் தேவஸ்தானம், பூந்தோட்டம், வவுனியா. 077 2265778



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Leading

## Crusher Works

Sole Proprietor
R.Rajendran



**Building Bridge & Road Contractor**
**Matal Supplier & Transporters**

**Hiring for exavator, Dozer, Motorgrader, Road Roller, JCB, Tipper & Loader**





Tel: & Fax: 024 2222990, 024 4927110
Email: leadingcrusher@yahoo.com #118, Poonthoddam Road, Vavuniya.

# மணமகன் மணமகள் தேவை



வெளிநாட்டு மணமகன், மணமகள், உள்ளூர் மணமகன், மணமகள், தேவையானவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்

## தர்சினி திருமண சேவை

இல: 04/B, குட்செட் வீதி, வவுனியா.
தொ.பே.இல: 077 8866806 / 0772940146


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# WORLD EXPRESS SERVICES

## INTERNATIONAL LOCAL COURIER SERVICE

குறைந்த செலவில் துரித கதியில் உங்கள் உறவினர் நண்பர்களுக்கு பரிசுப் பொருட்களையும் பொதிகளையும் அனுப்பிவைக்க எங்களை நாடுங்கள்

**எமது சேவையின் சிறப்பியல்புகள்**

- விரைவானதும் துரிதமானதுமான Door to Door சேவைகள்.
- எந்தவொரு நாட்டுக்கும் 3 அல்லது 4 வேலைநாட்களில் உரியவர்களிடம் ஒப்படைக்கப்படும்.
- 10Kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட விலைக்கழிவுகள்
- தேவையேற்படின் உங்கள் இடங்களுக்கே வந்து பொருட்கள் பெற்றுக்கொள்ளப்படும்
- யாழ் மற்றும் அனைத்து உள்நாட்டுப் பிரதேசங்களுக்கும் துரித கதியிலான சேவை




இல:180/5, புகையிரதநிலையவீதி, வைரவப்புளியங்குளம், வவுனியா. 024 4903200 / 024 4928455

**Head Office: No:338, Aluth Mawatha Road, Colombo 15. Tel: 0112 520 894 / 0114 345 966**

### OUR BRANCHES

| Kotahena: | Negombo: | Batticaloa: | Jaffna: |
|---|---|---|---|
| No:42, Kotahena Street, Colombo 13, Tel: 011 24 24 221 | No: 95,Sea Street, Negambo, Tel: 031 222 4544 031 493 6899 | No:419,Trinco Road,Batticaloa. Tel: 065 2228 995 065 4927 477 | No: 295, Palali Road,Jaffna. Tel: 021 2220 356 021 4923 677 |

**Hotline: 0773 870 952 / 0114 640 650**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed by Vijay Printing Centre, and Published by Print Land Publication, No:172B, Mill Road, Vavuniya. in May, 2014